உ

ஓம்.

வேத புருஷாய நம:

# ரிக் வேதம்.

—:(:o:):—

## ஸஞ்சிகைகளாக வெளிவருவது.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

Old Continuation No. 31.] [பழைய தொடர்ச்சி நெ. 31.

| VOL. 4. | 1931ஆம் மார்கழி | PART 2. |
|---|---|---|
| அஷ்டகம் 4 | | பகுதி ... 2. |

பத்திராசிரியர்: சிவத்தியாநாநந்த மஹர்ஷி.

"*What can be more tedious than the Veda, and yet what can be more interesting, if once we know that it is the first word spoken by the Aryan man?*'.— MAX MULLER.

'*The Great interest of the Rig-Veda is, in fact, historical rather than poetical*'.-- GRIFFITH.

'*True and honest scholars whose conscience tells them that they have done their best, and who care for the subject on which they are engaged more than for the praise of benevolent or the blame of malignant critics, ought not to take any notice of merely frivolous censure*'.— MAX MULLER.

PUBLISHED BY

**VEDA PRAVACHANA MANDIR,**

***27, Muthu Mudali Street, Royapettah, Madras.***

***(Formerly Vedic Bureau, Coonoor, Nilgris).***

சென்னை, ராயப்பேட்டை,

வேத ப்ரவசன மந்திரத்திற் பிரசுரிப்பது.

PRINTED AT
THE HOGARTH PRESS,
MOUNT ROAD, MADRAS.

தனிக்காப்பி விலை ரூ. 1.] **1931** [12 பகுதிகளுக்கு ரூ.

"பலவிதமான சிந்தனை மார்க்கங்களையுடையவர்களும், போற்றுக்களைத் தங்கள் வாய்க்குள்ளேயே மனனத்தால் காத்து வைத்துக் கொள்பவர்களும், ஒளிக்கு முன்னர் (அல்லது கிராஸ்மான் (Grassman) உரைப்படி ஒளி நாதனுக்கு முன்னர்) தருப்பையை விரிப்பவர்களுமான அவர்கள் தங்களைப் பெருங்கீர்த்தியினை லலங்கரித்துக் கொண்டனர்." என்பது.

(வேறு.

5. எவரெனக்கென வைம்பது குதிரைகளுனது
சவனமேன்ற போற் றநந்தா மளித்தனர் மகோநர்
அவர் பொருட்டொளி திகழ்வது மகத்துவம் பெருமை
தவழ்வ தக்கினி யமரனே நரரொடு சார்ந்த
திவண் சமைத்திடாய் பலத்தொடு கீர்த்தி சாருணவே.

(இ-ள்.) எந்தச் செல்வவான்களாகிய (மகோனர்களகிய) யஜமானர்கள் யக்ஞம் முடிந்து தானஸ்துதி தீர்ந்ததும் எனக்கு ஐம்பது குதிரைகள் தானமாகத் தந்தனரோ அந்த (மகோனர்களின்) செல்வவான்களாகிய யக்ஞகர்த்தாக்களின் பொருட்டு ஒளி திகழ்வதும், மகத்துவம் வாய்ந்ததும், பெரியதும், பரிசாரக மநுஷ்யர்களோடு கூடியதும் ஆகிய பலமும் புகழும் வாய்ந்த உணவுப்பொருளை, மரண தர்ம மற்ற வக்கினியே, நீ செய்து கொடுப்பாயாக.—(எ-று.)

ச்ரவ: என்னும் சொல்லுக்கு அன்னமென ஸாயணர் பொருள் கூறுவாரேனும் அச்சொல்லுக்கே பலம் கீர்த்தி என்னும் பொருள்களு முண்டானதுபற்றி மூன்றையும் கூட்டிப் 'பலத்தொடு கீர்த்தி சாருணவே' என்றார் செய்யுளில்.

வருக்கம் 10.

## 373 (19) மண்டலம் 5 அநுவாகம் 2 சூக்தம் 5.

5 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஆத்ரேயன் வவ்ரி. வடமொழிச்சந்தம்: 1, 2, காயத்திரி (கலிவிருத்தம்); 3, 4 அனுஷ்டுப்; 5 விராட் ரூபா (இயற்சீரான் வந்த அறுசீர்க் கழி நெடிலாசிரிய விருத்தம்). தேவதை: அக்கினி.

(அ)

1. ஒன்றன்பின் னொன்ற தாக வவத்தைகள்
மன்ற நின்றன வவ்ரிக்கண் ; வவ்ரி தீ
துன்ற வோர்ந்தனன் றாய்மடி தோய்ந்து நன்
கொன்றித் தோன்றுறு மொன்றல் பொருளையே.

(இ)

ஓர வத்தை மற்றொன்றை யுறுவிக்கும் ;
தேரி னோர்புரை வேறோர் புரையினின்
றேர தாக வெளிவரும் ; தாய்மடி
சேரு மந்தர நின்றவன் செப்புவான்.

(அ) ஸாயணருரை. (இ) மேனாட்டாசிரியர் (Griffith) உரை. ஸாயணர் வவ்ரியை இச்சூக்த ரிஷியின் பெயராகக் கொள்ளும்போது மேனாட்டுரைகாரர் வவ்ரி என்னும் சொல்லுக்கு உமி (புரை) அல்லது தோடு என்று உரைகூறுவர். இருசெய்யுட்கும் உரை வருமாறு :

(அ)

(இ-ள்.) வவ்ரி என்னும் ரிஷிக்கு ஒன்றன் பின்னொன்றாகக் கஷ்டங்கள் உண்டாகின்றன: அத்தகைய வவ்ரிரிஷி பூமியாகிய தாயின் மடிக்குள்ளே காணப்படும் பதார்த்தக் கூட்டங்களுள் (அக்கினி) தங்கியிருப்பதை யறிந்தனன். (அறிந்து எடுத்துக் கொண்டு போகட்டும் என முடிப்பர் ஸாயணர்.)—(எ-று).

(இ)

(இ-ள்.) ஒரு (அவஸ்தை) நிலைமை மற்றொரு நிலைமையைத் தோற்றுவிக்கும். ஒவ்வொன்றாகப் புரைகள் (மூடிகள்) வெளியாகின்றன. தாயின் மடிக்குள்ளிருந்து அவன் பேசுகிறான்.—(எ-று.)

இதன் உரைவிளக்கமாக லுட்விக் (Ludwig) என்பவர் "நமக்கு வெளித்தோற்றங்களும் சூணிலைகளுமே தெரிகின்றன. கடவுளது உண்மையான தன்மை நம் கண்ணுக்குப்படுவதில்லை. கடவுள் தம் தாயின் நெஞ்சுக்குள்ளிருந்தே பேசுகிறார்." என வியாக்கியானிப்பர்.

2. நன்கு ணர்ந்தவர் நாடொறுங் கூவுவார் ;
முன்பை யோம்புவர் முன்னுந் துதிகொடே;
வன்புரங்கள் மருவலர் நண்ணரும்
உன்பதிகளி னுன்னுழை வார்களே.

(இ-ள்.) உன்னுடைய பிரபாவத்தை நன்றாக வறிந்தவர்கள் உன்னை எப்பொழுதும் யக்ஞத்துக்காக அழைக்கிறார்கள். (அழைத்து) உனது பலத்தை அவிகளாலும் தோத்திரங்களாலும் காப்பாற்றுகின்றனர். சத்துருக்களால் அடைய முடியாத உனது புரிகளு (கோட்டைகளு)க்குள் நுழைகிறார்கள்.—(எ-று.).

'நூறு இரும்புக் கோட்டைகளாற் காப்பாற்றுவாயாக.' என்று மேல் மண் 7 சூக் 3 செய் 7-ற் கூறப்படுவது காண்க. இச் செய்யுட்கும் மேனாட்டாசிரியர்களுரை சற்று வேறுபடும். "உனது தோற்றத்துக்கும் உண்மைக்கும் உள்ள பேதத்தை யுணர்ந்து அவர்கள் அவியளித்தனர். ஒருபொழுதும் கெடாத பலத்தை யவர்கள் காக்கின்றனர். (கர்மஞான உணர்ச்சியாகிய) ஒரு பலம் வாய்ந்த கோட்டைக்குள் அவர்கள் நுழைந்து கொண்டு விட்டனர்" என்பது லுட்விக் அபிப்பிராயத்தை யொட்டிய மேனாட்டாசிரியர் (Griffith) உரை.

(வேறு) (அ)

3. பிறந்தவர் தொழிலியற்றுவோர் மதுவொடு பிறங்குஞ்
சிறந்த வித்துதி கொடுநடுவான் சிறந்தவன்றன்
றிறந்தனை யொளியுற்றதை வளர்க்கின்றார் சமுத்தி
னிறந்தரு நிட்கர் பெருஞ்சொல ரனம் விழைபவரே.

(இ)

சிவைத்திரேயன்றன் ஜந்தவர் கிருட்டியர் சேரத்
தவப்பலத்தினிற் புகழொடும் வளர்ந்தன ரிந்த
நவச்சுவை மதுவாய்தலிற் பிரகதுக்தனுமே
சுவர்ணமாலையைத் தரிக்கின்றான் பொருள் விழைச்சினனின்.

(அ) ஸாயணருரை. (இ) மேனாட்டாசிரியருரை.

| பதம் | ஸாயணர் | மேனாட்டுரைகாரர் |
| --- | --- | --- |
| ச்வைத்ரேயன் | அந்தரத்தில் மின்னுருவமாகப்பிறந்தவன் அக்நி. | ச்வித்ரையின மகன் (1 33.14பார்க்க). |
| ப்ரஹுதுக்த: | பெருந்துதியாளன், பெருஞ் சொல்லன் என்றதும் அது. ஒருமை பன்மை. மயக்கம், | ஒரு அரசனது பெயர் |

(அ) (இ-ள்.) கழுத்தில் நிஷ்கம் (பொன்னுபாணம்) தரித்தவர்களும், பெரிய உக்தங்களைக் கூறுவோரும், உணவுப் பொருள்களை விரும்புவோருமான பிறப்பாளர்களும் கன்மவான்களும் மதுவின் இனிய இத்துதியினால் அந்தரிட்சத்தில் மின்னலுருவிற் பிறந்த அக்கினியினது ஒளி நிறைந்த பலத்தை வளர்க்கின்றனர்.—(எ-று.)

* உக்தம் அல்லது சஸ்த்ரம் ரிக்வேத மந்திரமென்றும், அதனைக் கூறுவோனுக்கு ஹோதாவென்பது பெயரென்றும், ஸ்தோமம் ஸாமவேத மந்திரமென்றும் அதனைப்பாடுவோன் உத்காதாவென்றும், மண் 1. சூக் 94 செய் 6-ற் கூறப்பெற்றது. கன்மவான்கள், க்ருஷ்டய: ரித்விக்குக்கள் அல்லது ரித்விஜர்கள். இவர்கள் யஜுர்வேதம் தெரிந்த அத்வர்யுக்களும் ஆம். அத்வரம், யாகம் அல்லது யக்ஞம் இவற்றின் விரிவையெல்லாம் மண் 2 சூக் 1 செய் 2-ன் உரையிற் காண்க.

(இ) (இ-ள்.) சிவைத்ரேயனது ஜனங்களாகிய எல்லா மனிதர்களும் கீர்த்தி தோன்றப் பலத்தின் வளர்ந்தோங்கினர். இந்த ஸோமத்தின் துவாரா போரிற் கிடைக்கும் பொருள்களை விரும்புவது போல ப்ரஹ்துக்தனும் ஒரு சுவர்ணமாலையைத் தரிக்கிருன் —(எ-று)

ஜந்தவர், ஜனங்கள், ஜாயந்தே இதி ஜந்தவ: என்பது பொருள்.

4. சோதரிக்களின் றுணைவன், பாலெனவிழை தக்க
கோதிலெந்துதி விரும்புக, கொப்பரையென்ன
வோதுமுண்டிசால் வயிற்றின, னித்தியன், பகைவர்
தீதுசெய்யவே லாதவன் பகைவரைத் தெறுப்போன்.

(இ-ள்-) ஸஹோதரிகளாகிய பூமிவானங்களின் சகாயனும், எண்ணைக்கொப்பரையென்று சொல்லத்தக்க உணவுப் பொருள் நிறைந்த பெருவயிற்றினனும், என்று முள்ளவனும், பகைவரால் துன்பஞ் செய்ய முடியாதவனும், (ஆனல் பகைவரை இம்சிப்பவனுமாகிய (அக்கினி) பால்போல விரும்பத்தக்கவையும், குற்றமற்றவையுமான எங்கள் துதிகளினிடத்திற் பிரியங் கொள்ளட்டும்.—(எ-று)

இவ்விருக்கின் பொருள் விளங்கவில்லை என்று இடர்ப்படுவதோடு இதனடுத்த ரிக்கின் உரையும் ஊகித்து அறிந்தபடி எழுதிய உரையேயன்றி நிச்சயமான வுரையல்ல வென்று கூறுவர் மேனுட்டாசிரியர் (Griffith.)

(வேறு.)

5. கிரணத்தினெளிர்வோய் காட்டிற் கிரீடித்துத் தூளியோடுஞ்
சரணக்காலோர நன்னரெங்கள் பாற்சார்க ; மார்பிற்
கரணம்போற் கூர்ந்து நிற்குங் கதிர்களொன்னார்த்
தெறுச்குங்
கிரணங்களெங்கள் பக்கற் கிளருக கூரிலாதே.

(இ-ள்.) கிரணம் வாய்ந்த அக்கினியே! (காட்டிற்) கிரீடித்துத் தூளிசெய்து கொண்டு காற்றினுல் நன்ருக அறியப்பட்டு நிற்கும் நீ எங்களை நோக்கி வருவாயாக. வன்னியின் (அக்கினியின்) மார்பில் அவிசுமக்கும் உபகரணத்தைப் போலத் தீட்சண்யமாக நிற்பவையும், பகைவர்களை வாட்டுவனவுமான (உனது) ஜ்வாலைகள் எங்களிடத்துக் கூர்மையில்லாது (சாந்தமாக வென்றபடி) ஓங்கி நிற்கட்டும்.—(எ-று.)

கரணம் உபகரணம் என்பதன் தலைக்குறை. வக்ஷணே ஸ்திதா: வக்ஷய: என்னும் சொற்றொடருக்கு அவிசுமக்கும் வன்னியில் நிற்பன (சுவாலைகள்) என்பது பொருள்.

வருக்கம் 11.

## 374 (20) மண்டலம் 5 அநுவாகம் 2 சூக்தம் 6.

4 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: அத்திரி வம்சத்து ப்ரயஸ்வந்தர்கள். வடமொழிச் சந்தம்: 1-3. அநுஷ்டுப்: 4 பங்கி. தேவதை: அக்கினி.

இச் சூக்தம் 3வது ரிக்கில் வரும் ப்ரயஸ்வந்தோ ஹவாமஹே என்பதிலிருந்து ரிஷிப் பெயர் வந்ததென்று ஷட்குரு சிஷ்யர் கூறுவர்.

1. அன்னங் கூட்டுறு முத்தம, வக்கினி, தனமென்
றுன்னுகின்றனை யாததைக் கீர்த்தியின் முயங்கும்
பன்னுகீதமோ டுறைகுறு மெம்மதைப் பழக்கிற்
றுன்னு தேவர்க டம்மிடைத் தோய்வுறத் தருக

(இ-ள்.) உணவுப்பொருள்கள் மிகவும் தரும் உத்தமனே! அக்கினியே! (நீ எங்களுக்குக் கொடுக்கத்தகுந்த) செல்வம் எதுவென்று நினைக்கிருயோ அதனைக், கீர்த்தி வாய்ந்ததை, கீதங்களோடு கூடி நிற்கும் எங்களுக் குகந்ததை, இங்கு பழகும் தேவர்களது மத்தியில் கொண்டுவந்தளிப்பாயாக.—(எ-று.)

2. யாவ ரக்கினி தனத்தின ருனைவணங் காதார்
மேவு முக்கிரத் துன்வலி தனினிழிந் தனரால்;
ஓவி லன்னிய விரதத்த னுறுகின்ற பகையுந்
தாவி டுக்கணுந் தங்கண்மீ தணைவுறத் தருவார்.

(இ-ள்.) அக்கினியே! செல்வம் பெருத்தவர்களில் யார் (உனக்கு அவியுணவுகளை யளித்து) உன்னை வணங்காதவர்களோ அவர்கள் உக்கிரம் வாய்ந்த உனது பலத்தை (அல்லது அன்னத்தை) யிழந்தவர்களாவார்கள். (மேலும்) அன்னிய (அவைதிக) விரதத்தை யநுஷ்டிக்கின்றவன் அடைகிற உனது பகையையும் துன்பத்தையும் தங்கள்மீது வருவித்துக் கொள்ளுகிறார்கள்.—(எ-று.)

3. உன்னை யக்கினி பலத்தினின் கருவியைத் தேவர்,
தன்னைக் கூவுறுந் தூதனைத் தேர்ந்தனம்; மகத்தின்
முன்னு ளோனுனைப் பிரயசு வந்தர்கள் யாங்கள்
பன்னு கீதங்கள் கொண்டழைக் கின்றனம் பரிந்தே

(இ-ள்.) அக்கினியே! பலத்தை யடைவதற்குக் காரணனை உன்னைத் (தேவர்களை யழைக்கும்) ஹோதாவாய் வரிந்தெடுத்தோம். யக்ஞத்துக்கு முதன்மை வாய்ந்தவனுகிய உன்னை (ப்ரயஸ்வந்தர்கள்) அவி அன்னத்தோடு கூடிய (சூக்தரிஷிகளாகிய) யாங்கள் கீதங்களால் அழைக்கிறோம்.—(எ-று.)

(வேறு.)

4. பலமியைந்தவ நாடொறு நாங்களுன் காவல்
வலமியைவுறும் வகையெமைக்குயிற்ற, நன்மகத்தோய்,
நிழலியைவுற வெக்கியத்தின் பொருட்டாக
வலிய வாக்களின் மகிழ்ந்தவ ராகுக; வீரர்
பொலிய வன்னவர் தம்மொடு மகிழ்ந்தனமாக.

(இ-ள்.) பலம் பொருந்தியவனே! நல்ல க்ருது (ஞானம் அல்லது யக்ஞம்) வோடு கூடியவனே! தினந்தோறும் நாங்கள் உனது பாதுகாப்பைப் பெறுமாறு செய்க (நிழலை) செல்வத்தைப் பெறுமாறும், (ரிதத்தின்) யக்ஞத்தின் பொருட்டாகவும் நாங்கள் பசுக்களைப்பெற்ற மகிழ்ச்சியை யடைந்தவர்களாகுக. வீரர்களாகிய புத்திரர்களைப்பெற்றுஅவர்களோடு மகிழ்ச்சியுற்றவர்களாகுக.—(எ-று.)

வருக்கம் 12.

## 375 (21) மண்டலம் 5 அநுவாகம் 2 சூக்தம் 7.

4 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஆத்ரேயன் ஸஸன். வடமொழிச்சந்தம்: 1 - 3 அநுஷ்டுப், 4 பங்க்தி. தேவதை: அக்கினி.

இச்சூக்த ரிஷியின் பெயர் 4-வது ரிக்கிலுள்ள ஸஸயஸ்ய என்னும் பதத்திலிருந்து எடுத்ததென்பார் மேனாட்டாசிரியர்.

1. மனுவி னுன்னையா நிலைபெறத் தாபிப்போ, மங்கி,
மனுவி னன்னருன் றனைச்சுடர்ப் படுத்துவோஞ் சமித்தால்;
இனிதி, னங்கிர, தேவரை விரும்பெஜ மானற்
குனது பூசனை மனுவினி னுற்றுக வுவந்தே.

(இ-ள்.) அக்கினியே! மனுவைப்போல உன்னை யாங்கள் நிலைபெறுமாறு ஸ்தாபிப்போம். மனுவைப்போல் உன்னைச் சமித்துக்களால் மூட்டியொளிவிடச்செய்வோம். அங்கிரனே! தேவகாமியாயுள்ள யஜமானனுக்காக நீ மனுவிற்குப்போலவே தேவர்களை வணங்குவாயாக. —(எ—று.)

அங்கிரன், அங்கணநிருண முள்ளவன், அக்கினிக்கு ஓர் பெயர். எ ஜ ம ா ன ன், யஜமானன், யாகஞ்செய்விப்போன், செய்பவனுமாம்.

2. நீயு மானவ ருலகத்தி லக்கினி மனத்தி
னேயு மன்பொடு சிறந்தொளிர் கின்றனை; சுருக்கள்
தோயு முண்டியி னிடையறு துன்னிடைத் துதையும்,
பாயு நெய்யுண வேற்பவ வுயர்பிறப் படைந்தோய்.

(இ-ள்.) அக்கினியே! நீ மனுஷ்யர்களுக்கு மத்தியில் நல்லன்பொடு கூடியவனாய்ப் பிரகாசிக்கின்றனை. நெய்யுண்பவனே! உயர்பிறப்புள்ளவனே! சுருக்குக்கள் உனது உணவைப் பூர்ணமாகக் கொண்டு உன்னிடத்து இடைவிடாது பொருந்தும்.—(எ-று.)

சுருக்கள், ஸ்ருக்குக்கள், நெய்த்துடுப்புக்கள்.

2. ஒத்த வோகையர் தேவர்கள் யாவரு முன்னைத்
தத்து தூதனுச் சமைத்தன ராதலிற் கவியே
மெத்து சோதியின் விளங்குறு தேவனு முன்னை
யொத்துழைப்பவர் மகத்தினிற் போற்றுகின்றனரே.

(இ-ள்.) கவியே! (ஞானவானே யென்றபடி) எல்லாத் தேவர்களும் ஏகமனதாய் உவந்து உன்னைத் தூதனுக வமைத்தனர். (ஆதலால்) சோதியோடொளிரும் தேவனுகிய உன்னை யக்ஞத்திற் கூடி வேலைசெய்யும் யஜமானர்கள் (தேவர்களை யழைத்து வருவதற்காகப்) போற்றி யாசிக்கிறுர்கள்.—(எ-று.)

ஆதலின் என்ற சொல் உரையினின்று வருவித்தது.

வேறு.

4. தேவனங்கியா முன்றனைத் தேவ யாகார்த்தம்
சாவினுற்றவர் போற்றுத றகுதியாம்; சுங்க,
மேவு மிந்தனத் தோங்கியே யொளிருக; மேன்மை
யாவு முற்றநன் மகத்தகத் தமருக வின்பின்,
கூவு நற்சசன் மகத்தகத் தமருக கூர்ந்தே.

(இ-ள்.) சுக்கிரனே! (வெள்ளொளியோடு கூடியவனே யென்றபடி) ஒளி விளங்கும் தேவனும் அக்கிரண்யனு மக்கினியுமாகிய வுன்னைத் தேவ யாகத்தின் பொருட்டு மரண தர்மத்தோடு கூடிய மனிதர்கள் போற்றுவது நீதியாகும். அவியிந்தனங்களா லோங்கினவனுய்ப் பிரகாசிப்பாயாக. ஸ்வர்க்க ஸாதனமாகிய ரிதத்தினிடத்து (யக்ஞத்தினிடத்து) (தேவரூபத்தோடு) ஸந்தோஷமாய் அமர்வாயாக. ஸ்தோத்ரஞ் செய்யும் ஸஸனுடைய யக்ஞத்தினிடத்து ஆதராதிசயத்தோடு அமர்வாயாக.—(எ-று.)

வருக்கம் 13.

## 376 (22) மண்டலம் 5. அநுவாகம் 2. சூக்தம் 8.

4 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஆத்ரேயன் விசுவஸாமன்.

வடமொழிச் சந்தம்: 1—3 அநுஷ்டுப், 4 பங்தி.
தேவதை: அக்கினி.

1. நன்னர், விச்சுவ சாமனே, நாடு மத்திரியிற்
றுன்னு தூயொளி யோனுக்காத் துதி விளம்பிடுக;
மன்னு மத்வரத் தியாவரும் வணங்குறத் தக்கான்
பன்னுதற் குப ருத்தமன் பதிக்க ஹோதாவே.

(இ-ள்.) விசுவஸாமனே! பரிசுத்தமாக்கும் ஒளியோடு கூடியவனும் அத்வரத்தில் (யக்ஞத்தில்) எல்லாராலும் வணங்கப்படுபவனும், கிருஹத்தில் ஸ்தோத்திரஞ் செய்யப்படு முத்தமனும், ஹோதாவுமாகிய அக்கினிக்கு அத்ரி ரிஷியைப் போல ஸ்தோத்திர கீதங்களைப் பாடுவாயாக.—(எ-று.)

அத்வரம், யக்ஞம், இச்சொல்லிலிருந்தே அத்வர்யு (யாகஞ் செய்வோன்) என்ற சொல் வந்தது. யஜுர் வேத மந்திரங்களைக் கூறுவோன் மண்டலம் 2 சூக்தம் 1 செய்யுள் 2 பார்க்க. ஓதா, ஹோதா, தேவர்களைக் கூவியழைப்பவன்.

2. சாத வேதச னங்கியைத் தேவனை மகத்தின்
மாத மோடவி வழங்குவோன் றனையமைத் திடுக;
ஓது தேவர்த முத்தம நண்பனுக் கின்று
காத லோடவி கவித்திட மகத்திடை யறுதே.

(இ-ள்.) (யாகவான்களே!) ஜாதவேதஸனும், தேவனும், யக்ஞத்தில் ஸந்தோஷமாக அவி யுணவுகளைத் தரும் ரித்விக்கும் ஆகிய அக்கினியை அமைப்பீர்களாக. தேவர்களினுத்தம ஸ்நேகிதனுக்காக இன்று யக்ஞத்தில் அவி யுணவுகளை இடைவிடாதொழுகுமாறு நன்ருகத் தருவீர்களாக.—(எ-று.)

ஜாதவேதஸன், (1) சிருஷ்டிப் பொருள்களை யுணர்ந்தோன் (2) சிருஷ்டியாலுணரப்படுவோன் (3) ஆகர்ப்ப ஸ்ரீமந்தன் (செல்வத்தோடு பிறந்தவன்) (4) ஞானத்தோடு பிறந்தவன்—யாஸ்கர். மண் 1. சூக்44. செய் 1-பார்க்க. ரித்விக், இருத்துவிக்கு, யாகத்தில் அல்லது யக்ஞத்தில் அவியூற்றுபவன். ரித்விஜன் என்றும் கூறுவர். மாதம், ஸந்தோஷம, வடமொழித்தற்சமம்.

3. உளமறிந்தவன் றேவனு முனையுடன்வருவோர்
சளமனிதர் யா முதவியை நாடியே சார்ந்து
கொளுமுயர்வின னுன துகூ ருவகையின் பொருட்டிங்
குளமொ டின்னுறு துதியினுற் போற்றினு மன்றே.

(இ-ள்.) (அக்கினியே!) உன்னைத் தொடர்ந்து வருபவர்களும், மரண தர்மத்தோடு கூடிய மனிதர்களுமாகிய யாம் உன்னுடைய உதவியை விரும்பிச் சார்ந்து உயர்ந்தவனுகிய

(துதிக்கத்தக்கவனாகிய) உனது ஸந்தோஷத்திற்காக மனத்தின் எழுந்த துதிகளால் உன்னைப் போற்றுகின்றோம்.—(எ-று.)

சளம், பொய், ஈண்டு மரணதர்மத்தின்மேல் நின்றது.

(வேறு.)

4. அங்கி, மொய்ம்பினின் புத்திர, எங்களிவ் வசன
மங்கமாக நீ யறிக; நற்கதுப்பினோய், அகத்தின்
றுங்கநற்பதி, யுன்னையத் திரிசுதர் தோமத்
திங்கழகுற வளர்க்கின்றார்; அத்திரி சுதர்கள்
மங்கலம்பெறக் கீதத்தா லலங்கரித் தனரே.

(இ-ள்.) அக்கினியே! பலத்தின் புத்திரனே! எங்களது இந்த ஸ்தோத்திரவசனங்களை யறிவாயாக. நல்லகன்னத்தோடு கூடியவனே! கிருஹபதியே! உன்னை அத்திரி ரிஷியின் மக்கள் ஸ்தோமங்களால் வளர்க்கின்றார்கள். அத்திரி புத்திரர்கள் உன்னைக்கீதங்களா லலங்கரிக்கின்றனர்.—(எ-று.)

வருக்கம் 14.

## 377 (23) மண்டலம் 5 அநுவாகம் 2 சூக்தம் 9.

4 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: த்யும்நன் விசுவ (ச்) சர்ஷணி. வடமொழிச்சந்தம்: 1-3 அநுஷ்டுப், 4 பங்க்தி. தேவதை: அக்கினி.

த்யும்நன் அத்ரிகோத்திரத்தான். விசுவச (ch) ர்ஷணி யென்றதும் ம்ருக்தவாஹஸே (மண்5 சூக்18) என்பதுபோன்ற விசேஷண மென்பர் ஷட்குரு சிஷ்யர். எல்லா மாந்தர்க்கும் உறவினன் என்பது விச்வ(ச்) சர்ஷணி என்பதன் பதப் பொருள்.

1. அங்கி மீவலி யோடரி யொறுப்பதைத் தியும்நற்
பொங்கு செல்வத்தைப் போற்றொடு போர்க்கள மதனி
லங்க மாயுறு மடையல ரெவரையு மடக்கித்
தங்கு மன்னதைத் தந்தருள் புரிக நீ யுவந்தே.

(இ-ள்.) அக்கினியே! மிகுந்த பலத்தோடு பகைவரைத் தண்டிப்பதும், ஸ்துதிகளோடு கூடியதும், யுத்தகளத்தில் முன் னிடும் சத்துருக்களெல்லாரையும் அடக்குவதும் ஆன (புத்திர) செல்வத்தை த்யும்நரிஷிக்குத் தந்தருள்வாயாக.—(எ-று.)

புத்திர செல்வமென்பதும், த்யும்நஸ்ய என்பது 4-ம் வேற்றுமைப் பொருளில் வந்த ஆறும் வேற்றுமை யென்பதும் ஸாயணருரை. ஆனல் மேனுட்டாசிரியரோ 'த்யும்நஸ்ய ப்ராஸஹா' என்பதற்கு 'உன்னுடைய அழகு வாய்ந்த ஒளியின் பலத்தினுல் என்று பொருள் கொண்டு ஆஸா' என்பதற்கு 'வாயோடு அல்லது ஸ்துதியோடு கூடியதாய்' என்று ஸாயணர் உரை கூறுவதுபோலக் கூறுமல் எங்களருகிலிருப்பதும், என்று உரை கூறுவர். தியும்நன் நான்கன்ருகை.

2. அங்கி, மொய்ம்புளோய், சேனையை யடக்குறு மதனைத்
தங்கு செல்வத்தைத் தந்தருள்; சத்தியம் புகல்வோய்
துங்க வாக்களிற் றுதைபுறு வலிமையைத்தோய்ப்போன்
எங்கு மற்புத மகிமையை யியைந்தவ னீயே.

(இ-ள்.) அக்கினியே! பலம் வாய்ந்துள்ளவனே! யுத்தத்திலெதிர்க்கும் சேனைகளை யடக்குகின்ற அந்தப் புத்திர செல்வத்தைத் தந்தருள்வாயாக. நீயே ஸத்யன்; பசுக்களோடு பொருந்தும் உணவின் பலத்தை எங்களுக்குக் கூட்டிவைப்பவன்; அற்புத மஹிமையோடு கூடியவன்.—(எ-று.)

புத்திர செல்வமென்பது ஸாயணருரை.

3. மாந்தர் யாவருமொத்த தம் மனத்தினி னியைந்த
சாந்த வின்பத்தி னறுக்கிய தருப்பை சார்ந்தவராய்
ஏந்து நன்மகச் சதனத்திற் பிரியவோ தாவாய்ப்
போந்த வுன்னையே பல்பெருஞ் சிறப்பினை யிரப்பார்.

(இ-ள்) (அக்கினியே!) எல்லா மனிதர்களும் ஸந்தோஷ சித்தத்தோடு கூடியவர்களாய் அளவாக நறுக்கிப் பரப்பிய தர்ப்பையுற்றவர்களாய் யக்ஞக் கிருஹத்தில் (எல்லாருக்கும்) பிரீதியைத் தரும் ஹோதாவாகிய வுன்னையே பலவகைப்பட்ட சிறந்த செல்வத்தைத் தருமாறு யாசிக்கின்றனர்.—(எ-று.)

வேறு.

4. யாரு மன்புகொ ளவன்பகை யடக்கும்வெம் பலத்தைச்
சார; அக்கினி, யெங்களிக் கிருகங்க டம்மி
லாருஞ் செல்வங்கள் பொருந்துறச் சுக்கிர வடைந்தே
கூருநல் லொளி கூடி நீ விளங்குக; தூய்மை
சேரும் பாவக புகழொடு விளங்குக வொளிர்ந்தே.

(இ-ள்.) எல்லாரும் பிரியப்படுகின்ற (இச் சூக்த ரிஷியாகிய) அவன் பகைவரை யடக்கும் பலத்தைப் பெறட்டும். அக்

கினியே! வெளுப்பான சோதியோடு கூடியவனே (சுக்கிரனே)! எல்லாவற்றையும் பரிசுத்தப்படுத்துவோனே (பாவகனே)! எங்களுடைய இந்த கிருஹங்களில் நிறைந்த செல்வங்கள் பூரணமாகப் பொருந்துமாறு ஒளிவிட்டெரிவாயாக; கீர்த்தி நிறையுமாறு ஒளிவிட்டெரிவாயாக.—(எ-று).

இவ்விருக்குக்கு மேனாட்டாசிரியர் (Griffith) உரை வேறு.

5. யாரும் போற்றிடுந் தேவனு மவன் பகை யடக்கும்
தீரந் தன்னையன் னுனுக்குச் சேர்த்தனன்; அங்கி
ஏரி னிக்கிரு கங்களிற், சுக்கிர வொளியிற்
சார வெங்கடம் வாழ்வினுக்காக; பாவகனே,
கூரு நல்லொளி கூடியே விளங்குக சிறந்தே.

(இ-ள்.) எல்லாரும் வணங்கும் தேவனாகிய அவன் (அக்கினி யென்றபடி) பகைவரை வாட்டும் பலத்தை அவனுக்கு (சூக்தரிஷிக்கு) அளித்தான். அக்கினியே! வெள்ளொளியோடு கூடியவனே! இந்தக் கிருஹங்களில் எங்களுக்கு வாழ்வுண்டாகும் வண்ணம் அழகாக ஒளிவிட்டு எரிவாயாக. பாவகனே! (பரிசுத்தஞ் செய்பவனே என்றபடி) சிறப்பாக ஒளிவிட்டு எரிவாயாக —(எ-று.)

வருக்கம் 15.

## 378 (24) மண்டலம் 5 அநுவாகம் 2 சூக்தம் 10

4 இருக்குக்கள் கொண்டது.

(ஓதுவார்க் கிரண்டே.)

ரிஷி: கௌபாயனர்கள் அல்லது லௌபாயனர்கள், பந்து, ஸுபந்து, சுருதபந்து, விப்ரபந்து என்னும் நால்வரும்; ஒவ்வொருவரும் தனித்தனி ஒவ்வொரு ரிக் பாடினவர்கள்.

வடமொழிச் சந்தம்: துவிபாதவிராஜ் (கொச்சகக் கலிப்பா) தேவதை: அக்கினி.

ஏக ரி(ச்)சகர்களாகிய இவர்களது கதை 10-வது மண்டலத்தில் பின்வருமாறு கூறப்படுகிறது:—

இக்ஷ்வாகு வம்சத்தில் ரிதப்ரோஷ்டர்களென்னும் குடும்பத்தைச் சேர்ந்த அஸமாதியென்ற அரசனொருவன் இருந்தான். அவனுக்கு பந்து, ஸுபந்து, ச்ருதபந்து, விப்ரபந்து என்னும்

இந்நான்கு ரிஷிகளும் புரோகிதர்களா யிருந்தனர். அரச னுக்கு இவர்களைப் பிடிக்காமையால் மாயாவினர்களாகிய கிராதன், குலி என்னும் இருவரும் கெட்டிக்காரர்களென்று கேள்வி யுற்று அவர்களைப் புரோகிதர்களாக நியமித்துக் கொண்டான். கௌபாயனர்களாகிய அவ்விருடிகள் நால்வரும் அஸமாதியைக் கொல்ல அபிசார யாகஞ்செய்யத் தொடங்கினர். உடனே அம் மாயாவிப் புரோகிதர்கள் இதை யறிந்து புரு வேடங்கொண்டு யாகதலத்துக்கு வந்து ஸுபந்துவைக் கொன்றுவிட்டனர். மற்ற மூவரும் பத்தாவது மண்டலத்திலுள்ள 57 முதல் 60 முடிய வுள்ள ஸூக்தங்களால் துதித்து ஸுபந்துவையெழுப்பினரென்று பிரஹத் தேவதையும், வேதார்த்த தீபிகையும் கூறும். துவிபாத விராஜ் இவ்விரண்டாகச் சேர்த்து ஓதப்படும் வகையை மண் 1. ஸூக் 65-ற் காண்க.

இக்ஸூக்தம் மஹாபிகிர் யக்ஞத்தில் ஆஹவநீயத்தே போகும் ரித்விஜர்களால் ஜபிக்கப்படுவது. தசராத்ரத்தில் 6வது நாள் மைத்ராவருணர்களின் பொருட்டு 1, 2, 4 ரிக்குக்கள் ஓதப்படுவனவென்றும் கூறுப.

1, 2 அக்கினி நீ யெமக்குநனி யருகுறுக சிவனுகி
மிக்கபரி பாலகனுய் மிகவணங்கத் தக்கவனே!
அக்கினியே வசு வசுவி ஞர்ந்தவ நீ எங்களது
பக்கலுற, வொளியினுறு முத்தமநற் றனம்பகர்க.

(இ-ள்.) அக்கினியே! மிகவும் போற்றத்தகுந்தவனே! (சிவனுய்) நல்லது செய்பவனுய், ரட்சகனுய் எங்களுக்கு மிகவும் சமீபத்தில் வருவாயாக. அக்கினியே! வஸுவே! செல்வத்தோடு (அல்லது அன்னத்தோடு) நிறைந்தவனுகிய நீ எமக்கு வெகு சமீபத்தில் வருவாயாக. நன்ருகப் பிரகாசிக்கும் உத்தம (பசு முதலிய) செல்வத்தை எங்களுக்குத் தருவாயாக.—(எ-று.)

அக்நி: அக்ரணி: முன்னுறுபவன். சிவ: ஸுகக்ருது: நன்மை செய்பவன். வசு, வஸு, செல்வம்.

3, 4 அன்னவனீ யெமையெழுப்ப; வழைப்பினுக்குச் செவிசாய்க்க;
மன்னுமறம் விழைவோர்கள் யாவரினு மெமைக்காக்க;
துன்னுமொளி மிகுந்தவனே, சுயஞ்சோதீ சுகத்தினுக்குங்
கொன்னுறு நற் றுணேவர்க்குங் குறுகியுனை யிரப்போமே.

(இ-ள்.) பிரகாசமிக்கவனே! தன்னெளிகொடு விளங்குபவனே! நீ எங்களை எழுப்புவாயாக. எங்களுடைய அழைப்

புக்களைக் கேட்பாயாக. பாபங்களை விரும்பிப் புரியும் ஸமஸ்த ஜனங்களினின்றும் எங்களைக் காப்பாற்றுவாயாக. நாங்கள் சுகம் பெறுதற் பொருட்டும் சகாயர்களைப் (புத்திரர்களை யென்பார் ஸாயணர்) பெறுதற் பொருட்டும் உன்னிடத்து வந்து யாசிக்கின்றோம்.—(எ-று)

மறம், பாபம். ஸகிப்ய: ஸமானக்யாதிப்ய: புத்ரேப்ய: என்பார் ஸாயணர்.

வருக்கம் 16.

## 379 (25) மண்டலம் 5 அநுவாகம் 2 சூக்தம் 11

9 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஆத்ரேயர் (வஸூயவர்களெனினும் ஒக்கும்) வடமொழிச் சந்தம்: அநுஷ்டுப், (கலிநிலைத்துறை). தேவதை: அக்கினி.

இச்சூக்த ரிஷிகளின் பெயர் இச் சூக்தம் 9-வது ரிக்கிலுள்ள செல்வகாமிகள் என்று பொருள்படும் வஸூயவ: என்னும் பதத்தினின்று மந்திர லிங்கத்தினுற் பெற்றதென்றும் அத்திரி குடும்பத்தில் வஸூயவர்களென்று பிறந்ததாகக் காணப்பட்டதென்றும் ஷட்குரு சிஷ்யர் கூறுவர்.

1. நன்னர் நீங்களக் கினிதனைத் தேவனைக் காவ
றுன்னு வான்றுதி பாடுக; வசுயவன் யாங்க
ளுன்னு மிச்சைக டருக; சத் தியமுற்றோன் முனிவ
ரெண்ணும் புத்திர னெம்பகை கடக்குமா றியைக்க.

(இ-ள்.) வஸூயவர்களே! நீங்கள் தேவனுகிய அக்கினியை ரக்ஷணத்தின் பொருட்டு நன்றாகத் துதித்துப் பாடுவீர்களாக. வஸுவாகிய அவன் எங்களதிச்சைகளை யளிக்கட்டும். ரிஷிகளின் புத்திரனும் ஸத்யவானுமாகிய (அக்கினி) எங்கள் சத்துருக்களை யழிக்கட்டும்.—(எ-று.)

வஸு என்னும் சொல்லுக்கே அக்கினி ஹோத்ரத்திற்காக யஜமானர்களது வீட்டில் வசிப்பவன் என்று ஸாயணர் விரிபொருளுரைப்பர். வஸு செல்வம் என்னும் பொருளிற்பெரும்பான்மைவரும். அக்கினியை ரிஷி புத்ரனென்றது அவர்கள் அரணிகடைந்து பெறுவதினுல் வந்த உபசாரமொழி யென்பார் ஸாயணர். ரிஷிணும் புத்ர: என்று மூலத்திலுள்ளதால் மேனுட்டாசிரியர் ஸாயணருரைபோல அதனை ரிஷீணும் புத்ர:

என்று திரித்துப் பொருள் கொள்ளாமல் கட்டைகளின் புதல்வனே என்று மொழிபெயர்ப்பர்.

2. உண்மையோனவன் முந்தையோர் தேவரு முணர்ந்திங்
கண்மைசார் சுவைத்தாலுவி ஞருமோ தாவாய்
ஒண்மைவாய்சுபக் கதிருடன் பிரபையாஞ் செல்வத்
திண்மையோனென வமைத்தனர் யாவனேச் சிறந்தே.

(இ-ள்.) முன்னோர்களாகிய ரிஷிகளும் தேவர்களுங்கூட அவியுணவுகளாற் சந்தோஷப்படுத்தும் நாக்கோடு கூடிய ஹோதாவென்றும் ஒளி மிகுந்தசோபன கிரணங்களோடு வாய்ந்த (விபாவஸு) பிரபைச் செல்வத்தோனென்றும் யாரை நன்ருக மூட்டியமைத்தனரோ அவனே (அவ்வக்கினியே) ஸத்யன் அல்லது கர்மங்களின் உண்மைப்பயனை அளிப்பவன்.—(எ-று.)

3 மேன்மை யோடுநற் சிறப்பமை கருமத்தால் விளம்புங்
கோன்மை சாருமெம் வாக்கினுற் களியுளங் கூர்ந்தே
பான்மை வாய்ந்தபாக் களினெடும் பரந்தவ, சிறந்த
மேன்மை மிக்கவ வக்கினி பொருளெமக் களிக்க.

(இ-ள்.) நல்ல ஸ்தோத்திரப் பாக்களினுற் போற்றப்படுவனே! வரேண்யனே! அக்கினியே! மேலான சிறப்பு வாய்ந்த வெங்கள் கருமத்தினிடத்தும் நன்மனத்தோடு கூறும் எங்களது உத்தம துதிவசனங்களிடத்தும் ஸந்தோஷமுற்றவனுய் எங்களுக்குச் செல்வத்தைத் தருவாயாக.—(எ-று.)

வரேண்யன், சிறந்த மேன்மைமிக்கவன் என்ருர் செய்யுளில். எங்களாற் றேர்ந்தெடுக்கப்படும் உத்தமனே என்பது பொருளென்பார் (Griffith) மேனுட்டாசிரியர்.

4. அங்கி தேவர்தம் மிடையொளிர் கின்றன னழகின்;
அங்கி மர்த்திய ரகத்தினி னுழைகின்ற னுருவின்;
அங்கி யெங்கட மவிசுமந் தெடுக்கின்ருன்; அந்த
அங்கி தன்னையும் முளத்தொடு வணங்குக துதித்தே.

(இ-ள்.) அக்கினி தேவர்கள் மத்தியில் ஒரு தேவனுக விளங்குகின்ருன். அக்கினி மர்த்தியர்களுடைய கிருஹத்தில் ஆஹவநீய ரூபத்தோடு வருகிருன். அக்கினி யாங்கள் தரும் அவியுணவுகளைத் தேவர்களிடத்துச் சுமந்து செல்பவனுகின்ருன். (யஜமானர்களே!) அவ்வக்கினியை உங்கள் மனத்தெழுந்த ஸ்தோத்திரங்களால் வணங்குவீர்களாக —(எ-று.)

5. மிக்க கீர்த்தியி னுத்தமன் வெகுமறை யுரைப்போன்,
திக்கரிப்பவன் பகைவரைத் திகழ்புகழ் சிறக்க
வெக்கணும் பிதிர்க் கேய்ப்பவ னும்புதல் வோனைத்
தக்கதாசுடன் றனக்களித் திடுக வக்கினியே

(இ-ள்.) மிகுந்த கீர்த்தி (அன்னமென்பார் ஸாயணர்) வாய்ந்தவனும், உத்தமனும், மிகுதியான ஸ்தோத்திரங்களைக் கூறும் பக்திமானும், பகைவரை லக்ஷியஞ் செய்யாதவனும், (அதாவது பகைவரால் ஹிம்ஸிக்க முடியாதவனும்) தனது பிதிர்களுக்கு (பிதிர்க்களுக்கு)க் கீர்த்தியைக் கொண்டுவந்து வைப்பவனும் ஆன புத்திரனை அக்கினி தாசுஷனுக்கு (ஹவியளிக்கும் யஜமானனுக்கு)த் தந்தருளட்டும் —(எ-று.)

எக்கணும் வலித்தல் விகாரம். தாசுடன், தாசுஷன், அவிப்பொருள் தரும் யஜமானன் அல்லது யாககர்த்தா.

வருக்கம் 17.

6. அங்கி யீந்தருள்கின்றனன் சாதுக்கள் பதியை
பொங்குவீரரிற் போரினிற் பகைதெறுப் பவனை ;
அங்கி வல்கதி வாய்ந்தகைப் பகைவராலடக்க
விங்குருச்சயம் பொருந்திய வன்மை யேய் பரியை.

(இ-ள்.) ஸத்பதியும் வீரர்களாகிய பரிஜனங்களின் உதவிகொண்டு யுத்தத்திற் பகைவர்களை யடக்குவோனுமாகிய புத்திரனை அக்கினி (எங்களுக்குத்) தருகின்றான் (அல்லது ஸாயணருரைப்படி-தரட்டும்). லாகவமாகச் செல்லவல்லதும் பகைவரால் தடுக்கமுடியாததும் வெற்றிவாய்ந்ததுமான குதிரையை அக்கினி (எங்களுக்கு அளிக்கட்டுமெனக் கூட்டுக.)—(எ-று.)

(அ)

7. மனக்கருத்தினை வகிக்கு முத்தமத்துதி யங்கி
தனக்கெடுத்தவப் போதினின் விபாவசு சார்ந்த
கனத்த செல்வத்தைக் காட்டுக ; வுன்வயின் மிகுந்த
தனப்பெருக்கமு முண்டியும் வருந்தகையினவே.

(இ)

உத்தமப் பெருக்குளதுதி யங்கியது; ஒளியின்
மெத்து செலவத்தோ யுன்னதத் தொளிருக; அரசன்
பத்தினி முதற் பட்டத்து மகிஷியிற் பரிந்தே
சத்துவத்துட னததமு முனின் வெளி வருமே.

மு-கு. (அ) ஸாயணருரையைப் பின்பற்றியது. அவர் மஹிஷி இவ என்னும் மூலபதத்திலுள்ள இவ என்பது பாத பூரணத்துக்காக வந்ததெனக் கூறி மஹிஷி மஹதி என்ன ரயி: என்றும் பெயர்ச்சொல்லின் அடையாக்கி உரை கூறுவர். ஆனல் மேனுட்டாசிரியரோ (Griffith) மஹீதரரது உரையைப் பின்பற்றி பட்டமஹிஷி ராஜாவினது அந்தப்புரத்திலிருந்து ஆடம்பரத்தோடு வெளிவருவதுபோல என இவ என்பதை உவமைப் பொருளிற் கொண்டு, செல்வமும் பலமும் உன்னிடத்திலிருந்து வெளிவருகின்றன என முடிப்பர். (இ) அதற்கொத்தசெய்யுளாம். இவ்விருக்கு ஸாமவேதம் பூர்வார்ச்சிகத்தில் முதற் பிரபாடகத்தின் 2-வது பாதியில் 9-வது(அல்லது 4-வது) பாதியில் 6-வது ஸாமமாக வந்துள்ளது காண்க.

(அ)

(இ-ள்) துதிப்பவரது மனக்கருத்தை நன்ருக வெளிப்படுத்தும் உத்தமத் துதியை அக்கினிக்காகச் இயற்றும்போது, விபாவஸுவே! (பிரபையாகிய செல்வத்தோடு கூடியவனே) பெரிய செல்வத்தை எங்களுக்குத் தருவாயாக. (ஏனெனில்) பெரிய செல்வமும் உணவுப் பொருள்களும் உன்னிடத்திலிருந்து வெளிவருகின்றன.—(எ-று.)

(இ)

(இ-ள்.) உத்தமபலம் வாய்ந்த துதி அக்கினிக்குரியதாம். விபாவஸுவே! உன்னதப் பிரதேசத்திற் பிரகாசிப்பாயாக. அரசனது பட்டத்து மஹிஷியைப் போல உன்னிடத்திருந்து செல்வமும் பலமும் வெளிவருகின்றன.—(எ-று.)

8. ஒளிசிறந்தன வுன்கதிர்; பெரியநீ கல்லிற்
களிசிறந்தொலி காட்டுவாய்; அன்றியுஞ் சுயமா
யொளிவிளங்குறு முனதொலி வான்முகில் முழக்கி
னனிசிறந்து மேற்செல்லுறும் தன்முறைப்படியே.

(இ-ள்.) (அக்கினியே!) உனது கிரணங்கள் ஒளியோடு கூடி விளங்குகின்றன. பெரியவனுகிய நீ ஸோமம் நசுக்குங் கல்லைப்போலச் சப்திக்கின்ருய் (துதிக்கின்ருய் என்பர் ஸாயணர்). மேலும் தானுகவே பிரகாசிக்கும் உன்னுடைய சப்தமானது மேக கர்ச்சனையைப் போலச் சப்தித்துக்கொண்டு சுபாவமாக மேலே செல்லும்.—(எ-று)

9. இவ்வகை வசூ யுக்கள்யா மெங்கடம் வலிமை
யொவ்வு மங்கியை வந்தித்தோம்; உவன் மரக்கலத்திற்
றெவ்வரெங்களைப் பகைக்கு மெல்லாரையுந் தெறுத்துச்
செவ்விதிற் கடப்பிக்கநற் ருேழில் சிறந்தவனே.

(இ-ள்) வஸூயுவர்களாகிய நாங்கள் எங்களது பலத்தைப்போல வொழுகும் அக்கினியை இம்மாதிரியாக நமஸ்கரித்தோம். சோபன கர்மத்தோடுகூடிய அவன், நாவாய் கடலைத் தாண்டுவதுபோல நாங்கள் எங்களை வெறுக்கும் பகைவர்களைக் கடந்து செல்லுமாறு, அநுக்கிரகிக்கட்டும்.—(எ-று.)

வருக்கம் 18.

## 380 (26) மண்டலம் 5 அநுவாகம் 2 சூக்தம் 12.

9 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஷி வஸூயுவர்கள்.

வடமொழிச் சந்தம்: காயத்திரி (கலிவிருத்தம்)
தேவதை: அக்கினி.

1. அங்கி பாவக வார்ந்த சுயவொளி
தங்கு தாலுநற் றேவ வுவப்பதி
னிங்கு தேவ ரெடுத்து வருக; பி
னங்க மாக வவரை வணங்கவே.

(இ-ள்.) அக்கினியே! பாவகனே (தூய்மைப்படுத்துபவனே!) தேவனே! (ஒளிர்கின்றவனே) சுயம் பிரகாசத்தோடு கூடியதும் தேவர்களுக்கு உவப்பைத் தருவதுமாகிய நாக்கோடு (சுவாலைகளோடு) தேவர்களை இங்கு அழைத்து வருவாயாக. அவர்களை வணங்குவாயாக.—(எ-று.)

2. அன்ன வுன்றனை நெய்யி னணைபவ
வன்ன சோதியின் வாய்ந்தவ வானினை
நன்னர் நோக்குனைத் தேவரெஞ் சாற்றினிற்
றுன்ன வேண்டினந் தூக்கி வருகவே.

(இ-ள்.) நெய்யோடுறைபவனே! (நெய்யிற் பிறப்பவனே என்றும் கூறலாம்) சித்ரபானுவே! வானை நோக்குகின்ற (எல்லாரையும் பார்க்கின்ற என்பார் ஸாயணர்) உன்னை அவ்விருந்தயரத் தேவர்களைக் கொண்டுவருமாறு யாசிக்கின்றோம்.—(எ-று.)

3. சாறழைப்பவ னுன்னைக் கவியொளி
வீறு வாய்ந்தநன் மேன்மையனை மகத்
தேற வங்கி யியைந்த சமித்தினு
னூற முட்டி யொளிர்த்து கின்றோம் யாமே.

(இ-ள்.) கவியே! (தூரதிருஷ்டி வாய்ந்தவனே அல்லது ஞானவானே) அக்கினியே! யக்ஞ விழவிற்காகத் தேவர்களை யழைப்பவனும், ஒளி சிறந்தவனும், மேன்மை தங்கியவனுமாகிய வுன்னை அத்வரத்தில் (யக்ஞத்தில் அல்லது மகத்தில் என்றபடி) ஸமித்தினால் நன்றாக மூட்டி ஒளிரச் செய்கின்றோம்.—(எ-று.)

4. அங்கி தேவரெல் லாரையு மிட்டுக்கொண்
டிங்கு சேர்க; அவிதரு வோனுக்கா
அங்க மாகநற் றேவ ரழைத்திடுந்
துங்க தூதனென் றுன்னை வரிப்பமே.

(இ-ள்.) அக்கினியே! எல்லாத் தேவர்களையும் இங்கு அழைத்துக்கொண்டு வருக. அவிதரும் யஜமானனுக்காக தேவ ஹோதாவாகிய உன்னைத் தேர்ந்தெடுத்தோம்.—(எ-று.)

5. எக்கி யத்திற் சுதை பிழி வோனுக்குத்
தக்க வீரிய மக்கினி சார்த்துக;
ஒக்க வீற்றிருப் பாயவட் டேவரின்
பக்க லேதிற் பரப்பிய தர்ப்பையின்

(இ-ள்.) அக்கினியே! யக்ஞத்திற் சோமம் பிழிபவனுக்கு நல்ல வீரியம் வாய்ந்த பலத்தைக் கொணர்ந்தளிப்பாயாக. அவ்வெக்கியத்திற் பரப்பிய தருப்பையின்மீது அத்தேவர்களோடுகூட அமர்வாயாக—(எ-று.)

வருக்கம் 19.

6. மூட்டப் பெற்றவ, வாயிர முன்னலர்
வாட்டி வெற்றி மகிழ்பவ, வக்கினி,
கூட்டு தூத குறைவின்றித் தேவரை,
ஊட்டு கின்று யறத்தினைக் கீர்த்தியோய்.

(இ-ள்.) நன்றாக (அவிப் பொருள்களால்) மூட்டப் பெற்றவனே! ஸஹஸ்ரஜித்தே! (ஆயிரவரை வெல்பவனே) அக்கினியே! (உக்த்யனே) கீர்த்தி வாய்ந்தவனே! தேவர்களெல்லாரையும் கொண்டுவரும் தூதனாய் நீ தர்மங்களை (எங்கள் கர்மங்களை)ப் போஷிக்கின்றாய் —(எ-று.)

7. அங்கி சாத தனத்தினன் யாகத்திற்
றங்கவி தலை வாய்கட் டிளமையன்
இங்கொ ளிர்தரு தேவ னிருத்விசன்
அங்க மாக வுறைய வமைக்கவே.

(இ-ள்.) ஜாதவேதசனும் (பிறவிச் செல்வத்தோனும்) யக்ஞத்திலுள்ள அவி சாதனங்களைச் சுமப்பவனும், கட்டிளமை வாய்ந்தவனும், ஒளி வீசுகின்ற தேவனும், ரித்விஜனுமாகிய அக்கினியை (யக்ஞவான்களே!) இங்கு அமைப்பீர்களாக.—(எ-று.)

8 நன்று யக்ஞ நடக்க விடைவிடா
தின்று தேவ ரெலாரையு முட்கொண்டீட;
துன்ற வன்னவர் தூய தருப்பையை
மன்ற வைதின் விரித்து மகிழ்கவே.

(இ-ள்) இன்றைக்கு ஒளி பொருந்திய எல்லாத் தேவர்களோடும் (ஸ்தோதாக்களோடென்பார் ஸாயணர்) யக்ஞமானது இடையறுது நடக்கட்டும். அத்தேவர்கள் (அக்கினியென்பார் ஸாயணர்) தங்குமாறு தருப்பையைப் பரப்புவீர்களாக.—(எ-று.)

9. இங்க மர்க மருதர் வயித்தியர்
பொங்கு மித்ரன் வருணன் புணர்ந்திடு
மங்க மார்ந்த குழுவினர் யாவருந்
தங்கு சீருள தேவர் தழைக்கவே.

(இ-ள்) மருத்துக்களும், தேவ வயித்தியர்களாகிய அசுவினிகளும், மித்ரனும் (ஸூர்யனும்) வருணனும், தங்கள் தங்களது பரிஜனங்களோடு கூடிய எல்லாத் தேவர்களும் இங்கு தர்ப்பையில் அமரட்டும்.—(எ-று.)

வருக்கம் 20.

## 381 (27) மண்டலம் 5 அநுவாகம் 2 சூக்தம் 13.

6 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: அத்திரி; அல்லது த்ரிவ்ருஷ்ணன் புத்ரனுகிய த்ரயருணனும், புருகுத்ஸன் புத்ரனுகிய த்ரஸதஸ்யுவும், பரதன் புத்ரனுகிய அசுவமேதனும் ஆகிய மூவர் அரசருமாம்.

வடமொழிச் சந்தம்: 1—3 த்ருஷ்டுப். 4—6 அநுஷ்டுப்.
தேவதை: 1—5 அக்கினி, 6 இந்திராக்கினியர்.

தங்கள் தானத்தைத் தாங்களே புகழ்ந்து கூறுவார்களாவென்னும் பட்சத்தில் அத்திரி தானே ரிஷியென்றும் ஆனல் ஒருவன் தானே ஆத்ம பந்துவும் ஆத்ம விரோதியுமாகிரு

னென்று மேற்கோள்களுண்மையின், மேற்சொன்ன ராஜ ரிஷிகள் மூவரே என்று சொல்வதிற் பிழையில்லை யென்றும் ஷட் குரு சிஷ்யர் உரைப்பர்.

சந்த நோக்கின் இச் சூக்தம் இரண்டு ராஜ குடும்பத்தினரின் தானஸ்துதி யென்பது மேனாட்டாசிரியர் மதம்.

1. சகடத்தோ டிருமிரண்டு காளைக டந்தான் ஞான [ரூன்
வகையினிற் சிறந்தோ னல்லோர் பதி வலி வளமை பெற்
தகுதிரு விருட்டினன்றன் றநயனுந் திரயா ரூணன்
மகிமை யுற்றுன் வயிச்சு வாநர வபுதத் தங்கீ!

(அத்திரி ரிஷி அக்கினிக்கு முன் நின்று ராஜ ரிஷியின் கொடையை இச் சூக்தத்தால் வர்ணித்தார்.—ஸாயணர்).

(இ-ள்.) வைச்வாநரனே (எல்லா மாந்தரையும் நடத்துபவனே) அக்கினியே! உத்தம ஞானவானும், ஸத்துக்களுக்கு அரசனும் (ஸத்பதியும்) பலவானும் (அஸுரனும்) செல்வவானும் (வளமை மிகுந்தவனும் அல்லது மகோனனும்) த்ரிவ்ருஷ்ணன் புத்ரனுமாகிய த்ரயருணன் வண்டியோடு கூடிய இரண்டு எருதுகளளித்தனன், (அல்லது இரண்டு காளைகளிழுக்கும் வண்டி நிறைந்த பொன்னை எனக்களித்தான்). அதனால் அவன் சதஸஹஸ்ர தனவானென்று எல்லா ஜனங்களாலும் அறியப் படுகிறான்.—(எ-று.)

பதினாயிரம் பொன்னளந்தவனென்று கருதப்படுகிறான் என்றபடி.

2. எனக்குநூற் றிருப தாக்க ளியைத்தவ னிழுக்கும் வன்மை
நுனித்த தேரரி யிரண்டு நுகாத்திய தயாருணற்கா
வினித்த நற்சுக மளிக்க நற்றுதி யியைந்த வங்கீ
மனித்தர் யாவருக்கு நாத வளர்ந்தெரி வீசுங்காலே.

(இ-ள்.) (வைச்வாநரனே) எல்லா மனிதர்க்கும் நாதனே! அக்கினியே! நல்ல ஸ்துதி வாய்ந்தவனே! நீ நன்றாய் வளர்ப்பவனாய்க் கொண்டு எனக்கு நூற்றிருபது பசுக்களையும், தேரிற் பூண்டு நன்று யிழுக்கவல்ல இரண்டு குதிரைகளையுந் தந்த த்ரயருணனுக்கு நல்ல சுகத்தை யளிப்பாயாக.—(எ-று.)

3. பன்மகா ருள்ள வென்றன் பலேநுதி த்ரயாருணன்று
னென்னெடு மியைந்து பாடு மிவ்வகை யங்கி நீப் போற
றுன்னுவோ யுனக்குப் போற்று நூதன முறையுளுற்று
மன்னனுந் திரச தஸ்யு வழங்குவான் பெறுக வென்றே.

(இ-ள்.) அதிகம் குழந்தைகளுள்ள (அத்திரியாகிய) என்னுடைய பலவித ஸ்துதிகளையும் கேட்டுவக்கும் த்ரயருணன் என்னும் ராஜ ரிஷி என்னோடுகூட (இதம் க்ருஹாணவென்று) பாடுவதுபோலவே, அக்கினியே! அதிகமாகப் போற்றப்படுபவனே! உனக்கு நூதனமான ஸ்துதிகளை விரும்பிச் செய்யும் த்ரஸதஸ்யு வென்னும் ராஜ ரிஷியும் (இதனைப் பெற்றுக்கொள்வாயாக இதனைப் பெற்றுக்கொள்வாயாக வென்று என்னோடு) கூடப்பாடுவான்.—(எ-று.)

த்ரஸதஸ்யு, தஸ்யுக்களை யடக்குவோன் என்பர் லுட்விக்.

(வேறு.)

4. யாரெனக்கெனச் சொல்லுவா னசுவமேதனுக்குச்
சூரியின்பொருட் டிருக்கொடு மகமியற்றுகவென்
றோரினன்னவன் றனக்கவற்குறு பொருளளிப்பான்
சாரு ஞானமுந் தருகுவன் மகம் விழைபவற்கே.

(இ-ள்.) யாகஞ் செய்யும் யஜமானன் விஷயத்திற் பரிந்து அசுவமேதனிடத்துச் சென்று மந்திரங்களைக் கூறிச் செல்வம் விரும்புமென்பொருட்டு யக்ஞஞ் செய்வாயாக வென்று யார் சொல்லுகிறானோ அவனுக்கு அவ்வசுவமேதனும் வேண்டிய பொருளளிக்கிறான். யக்ஞம் செய்ய விரும்புவோனுக்கும் யக்ஞஞ் செய்யும் விதிகளைப் புகட்டும் ஞானத்தையும் அளிக்கிறான்.—(எ-று)

"இது கடினமான ரிக்கு. தன்னை யாகம் செய்யுமாறு கேட்பவன் தனக்கு ஞானத்தை விருத்தி பண்ணுவதோடு புரோகிதர்களுக்குச் செல்வத்தையும் விருத்திபண்ணுகிறான் என்று அசுவமேதனென்ற ராஜ ரிஷி கூறினதாகும் இது" வென மேனாட்டாசிரியர் (Griffith) விளக்குவர்.

5. அசுவ மேதன்யா ரவன்றரும் பலநிற நூறு
பசுவின் காளைக ளென்னைநனி மகிழ்வினிற் படர்வா
னிசைவுறுத்துவ, முப்பொருள் கலந்திவ ணுன
நசைவளர்க்குறு சோமங்க ளென்னவே நலக்க.

(இ-ள்.) அசுவமேதன் தரும் பலநிற முள்ள (இச்சைகளைப் பூர்த்தி செய்யும் என்பார் ஸாயணர்) பலம் ஓங்கும் நூறு காளைகள், தயிர் பொரிமா (ஸக்து) பால் என்னும் மூன்றுங் கலந்தான ஸோமங்களைப்போல என்னை மிகவும் ஸந்தோஷிக்கச் செய்கின்றன.—(எ-று.)

ஸக்து, பொரிமா, சத்துமாவென்பார் வழக்கத்தில். பருஷா: உக்ஷ்ண:—காமாநாம் பூரகா: பலீவர்த்தா (dh): என்றும் ஸாயணருரை கூறுவர். பசுவின் காளைகள் என்றது இனத்தையும் தன்மையையும் குறிக்க வந்தது.

6. இந்தி ராக்கினி நூறெனுங் கொடை சிறந்தியைவோன்
நந்து வீரிய மியைந்தது மூப்பெனு நவையை
யந்துருததோர் பெரும்பொரு ளசுவமேதற்காத்
தந்தருளுவீர் வானிடைத் தயங்கு மென்றாழின்.

(இ-ள்.) இந்திராக்கினிகளே! நூற்றுக்கணக்கான செல்வங்களை யளிக்கும் அசுவமேதனுக்காக நல்ல வீரியத்தோடு கூடினதும், சரைத்தன்மையை யடையாததும் மகத்தானதும் (மேற்சொன்ன காரணங்களால்) சூரியனை யொத்ததுமான பொருளை (வீர பலத்தை யென்பார் மேனுட்டாசிரியர்) நன்ருகத் தாங்குவீர்களாக அல்லது (ஸாயணருரைப்படி) தருவீர்களாக.—(எ-று.)

வருக்கம் 21.

## 382 (28) மண்டலம் 5 அநுவாகம் 2 சூக்தம் 14.

6 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: அத்ரி கோத்திரத்தைச் சேர்ந்த விச்வவாரா என்னும் ரிஷிகை.

வடமொழிச் சந்தம்: 3 திருஷ்டுப்; 2 ஜகதி (4 காய்ச்சீர்வரும் அறுசீர்க்கழி நெடில்); 4 அநுஷ்டுப்; 5, 6 காயத்திரி. தேவதை: அக்நி.

மு. கு. இதற்கு முன் லோபாமுத்திரையும் (மண். 1 சூக். 179) ரோமசாவும் (மண். 1 சூக். 126) ரிஷிகைகளாக வந்துள்ளாரேனும் இச் சூக்த ரிஷிகையைப்போல சூக்த முழுவதும் பாடியவராக வரவில்லை.

1. நன்கெரி மூட்டப்பெற்றூ னக்கினி நபத்திற் சோதி
யின்புறவிடுத்தான்; வைக லெதிரிலும் பரந்தொளிர்வான்;
பென்பெறுதுதியாற் றேவர்ப் போற்றுவா ளவிபு நெய்யுந்
துன்றியதுடுவை விச்சுவாரை கீழ்த்திசை தோய்ந்தாளே.

(இ-ள்.) நன்ருக மூட்டப்பெற்றவனுகிய அக்கினி ஆகாசத்திற் (அல்லது அந்தரிட்சத்திற்) றனது ஜோதியைச் செல

விட்டான். அவன் உஷஸுக்கெதிரிலும் பரந்து விளங்குவான். அழகிய ஸ்துதிகளால் தேவரைப் போற்றுபவளும், அவியுணவுகளும் நெய்யுங் கலந்த சுருக்கை யேந்தியவளுமாகிய விச்வவாரா (எல்லாப் பாபங்களையுங் கடப்பிப்பவள்) கீழ்த் திசையிலுள்ள (அக்கினிக்கெதிரில்) செல்லுகிறாள்.—(எ-று.)

விச்சுவாரை, விச்வவாரா வென்பதன் திரிபு. இப்பதத்தினை ரிஷிகையின் பேராகக் கொள்ளாமல் எல்லாவரங்களையும் (அல்லது ஆசீர்வாதங்களையும்) தருவது என்று மேனாட்டாசிரியர் (Griffith) பொருள் கொண்டு மொழிபெயர்ப்பர் அற்றேல் பின்னிரண்டடியை,

பொன் பெறுதுதியாற் றேவர்ப் போற்றுவதவியு நெய்யுந்
துன்றிய சுருக்கெவ்வாசி தோய்ந்தது கிழக்கே கிற்றே.

எனப்படிக்க. எவ்வாசி உம்மைத் தொகை எவ்வாசியும் (எல்லா ஆசிகளும்) என விரித்துப் பொருளுரைக்க. ஸாயணர் விச்வவாரா வென்பது எல்லாப் பாபங்களுமாகிய சத்துருவை யோட்டுபவளெனக் காரணப் பெயராகவே கொண்டு, இப்பெயர் கொண்ட ரிஷிகை என்பர்.

வேறு.

2\. நன்றாக மூட்டப்பெற் றவனாக
வமுதத்தின நாய னுவாய்;
பொன்றாத வாழ்வையுற வவிகூட்டு
வோன்றொழிலைப் புரிகின் றாய்நீ;
கன்றாத கருந்தனங்க ளெல்லா நீ
செலுமவன்றான் கனக்கச் சேர்ப்பான்;
குன்றாத விருந்துணவை யக்கினியே
யுனக்கெதிரிற் குவிக்கின் றானே.

(இ-ள்.) அக்கினியே! நீ நன்றாக மூட்டப்பெற்றவனாய் அமிருதத்திற்கு ராஜாவாகிறாய். கெடாத வாழ்வைப்பெற அவிகூட்டுவோனுக்குச் சேவகம் செய்கிறாய். நீ யாரிடத்திற் செல்லுகிறாயோ அவன் (பசு முதலிய) எல்லாவிதச் செல்வங்களையும் அடைகிறான். மேலும் அதிதியாகிய உனக்கெதிரில் விருந்துக்குத் தகுந்த உணவைப் பொருள்களைக் கொண்டுவந்து வைக்கிறான் —(எ-று.)

அம்ருதஸ்ய என்பதற்கு உதகத்தின் என்று ஸாயணரும் அமரருலகின் என்றும் மேனாட்டாசிரியரும் பொருள் கூறுவர்.

(வேறு)

3. அங்கிமீச் சுபத்தனத்திற் கடையலர்த் தெறுக்க; உன்றன்
பொங்குதே சுயர்வதாகப் பொருந்த; எம் மனையின் வாழ்
யங்கநன் னியமத்தோடு மணைவுறப் புரிக; வாட்ட [க்கை
வெங்களைப் பகைக்கு மன்னு ரிடும்பு சாலொளியை நன்கே.

(இ-ள்.) அக்கினியே! எங்களுக்கு வாழ்வையளிக்கும் பெரிய செல்வத்தின் பொருட்டு எதிரிகளை யடக்குவாயாக. உன்னுடைய தேஜஸ்கள் உத்தமப் பிரகாசத்தோடொளிரட்டும். எங்களுடைய புருஷன் மனைவி வாழ்க்கை நல்ல நியமத்தோடு வாய்ந்ததாகச் செய்க. (அந்யோந்ய ஒற்றுமையோடு கூடியதாகச் செய்க என்றபடி) எங்களை விரோதிக்கும் பகைவர்களது வலிமையை (கீர்த்தியை) நீ ஆக்ரமிப்பாயாக (வாட்டி ஒடுக்குவாயாக).—(எ-று.)

(வேறு).

4. நன்ன ரோங்கிய பேரொளி யக்கினி நலக்க
வுன்ன ரும்புக ழொளியினை வணங்குவல்; இடபம்
பன்ன ருந்தன வானெனப் பரவுவாய்; மகத்தின்
மின்னு கின்றனை மேன்மையின் மூட்டப்பெற்றொளிர்ந்தே.

(இ-ள்.) நன்றாக மூட்டப்பெற்றோங்கிய ஒளியோடு கூடிய அக்கினியே! உன்னுடைய கீர்த்தி மிகுந்த தேஜஸை நான் வணங்குகிறேன். இச்சைகளை யளிக்கும் விருஷபமாகிய நீ மிகுந்த செல்வவானாகப் பரந்து விளங்குகின்றாய். அத்வரத்தில் நன்றாக மூட்டப்பெற்றுப் பிரகாசிக்கின்றாய்.-(எ-று.)

(வேறு)

5. நன்கொ ளிர்பவ வங்கிநல் லத்வர
நன்க ழைக்கப் படுபவ தேவரை
முன்பெ சிக்க வவிப்பொருள் மொய்ம்பொடும்
பின்சு மப்பவ னீயெனப் பேசலின்.

(இ-ள்.) நன்றாக மூட்டப்பட்டொளிர்பவனே! அக்கினியே! நல்ல யக்ஞத்தோடுகூடியவனே! நன்றாக அழைக்கப் படுபவனே! நீ (ஹவ்யவாட்) அவி சுமப்பவனென்று பலராலும் சொல்லப் பெறுபவன். ஆதலினாலே (இந்திராதி) தேவர்களை யஜிப்பாயாக,—(எ-று.)

அத்வரம், யக்ஞம். எசிக்க, யஜிக்க, யக்ஞக்கிரியைகளைச் செய்து வணங்குவாயாக. நீ ஹவ்யவாஹநனாக விருக்கிறாயாதலின் என்றே மூலத்தில் உள்ளது.

6. ஆற்றிக் கூவுக நற்பணி யாற்றுக
வேற்று நன் மகத் தங்கியை யென்றுநீர் ;
சாற்று மவ்விய வாகனன் றன்னையே
போற்றிக் கொள்ளுக தேர்ந்து புகழொடே.

(இ-ள்) (ரித்விஜர்களே!) யக்ஞமியற்றி அக்கினியைப் பிரார்த்திப்பீர்களாக. அவனுக்கு ஊழியம் புரிவீர்களாக. ஹவ்ய வாஹனனாகிய அவனையே தேர்ந்தெடுத்துக்கொள்ளுவீர்களாக.—(எ-று.)

வருக்கம் 22.

## 383 (29) மண்டலம் 5 அநுவாகம் 2 சூக்தம் 15.

15 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: சக்தி கோத்திரத்திற் பிறந்த கௌரவீதி.

வடமொழிச்சந்தம்: த்ருஷ்டுப். தேவதை: இந்திரன். 9-வது ரிக்குக்கு உசனன் அல்லது இந்திரன்.

1. மூன்றொளி மனிசன் தேவர் விருந்தமைக்குங்கால் மூளும் ;
மூன்றுவான் சோதிதன்னை யமைத்தனர் மருதர், மொய்ம்பி
னேன்றதூய் வலிமையோர்க ளுனையருச்சிக்கின்றூரால் ;
சான்ற விந்திரனே நீயு மவர்கள திருடியாவாய்.

(இ-ள்.) மனிதன் தேவர்களுக்காக வமைக்கும் யக்ஞத்தில் மூன்று தேஜஸ்கள் உள. மருத்துக்கள் அந்தரிட்சத்திற் றோன்றிய (வாயு, அக்கினி, ஸூர்யன்) மூன்று சோதிகளை யமைத்துள்ளார்கள். தூய்மை வாய்ந்த பலத்தினர்களாகிய அம்மருத்துக்களே உன்னை ஸ்துதிக்கிறூர்கள். இந்திரனே! தீரன் (ஞானவான் என்றபடி) ஆகிய நீ யவர்களைப் பார்ப்பவனுகிறுய்.—(எ-று.)

3 ஒளி, ஆஹவநீயமாதிகளை, அதைவிட்டு ஸூரி, ரித்விஜர்கள், ஜனங்களென்னும் மூவரையும் குறிக்குமோவென்பார் லுட்விக் (Ludvig) என்பவர். மருத்துக்களுக்கு இந்திரனை ரிஷியென்றது அவன் அவர்களைப் பார்ப்பதனுல் (திருஷ்டாவாயிருப்பதனுல்) என்க. ரிஷி, திருஷ்டாவென்னும் பொருளில் வந்தது. வேதத்திற் பதங்களெல்லாம் (யௌகங்கள்) பொருளுள்ளன வென்பதே யாஸ்கர் மதமென வறிக.

2. தொடர்ந்தப் போதிவனைச் சோமம் பருகு மிந்திரனைப் போற்றி
யடர்ந்தனர் மருத்த ரப்போ தவன்கையிற் சம்பமீந்தார்;
படர்ந்தெப்போ தகியை யன்னான் பண்பற வாட்டினனத்
திடந்தருகாலை நீர்மிக்கோடுறத் திறந்தானன்றே.

(இ-ள்.) சோமங் குடிக்கு மிந்த இந்திரனை மருத்துக்கள் எப்பொழுது பின்றொடர்ந்து துதித்தார்களோ அப்பொழுதே அவர்கள் அவனது கையில் வச்சிராயுதத்தை யளித்தார்கள். அஹி (பாம்பு) யாகிய விருத்திரன்மீது படர்ந்து சென்று எப்பொழுது அவ்விந்திரன் அவனைக் கொன்றானோ அப்பொழுதே (அவ்விருத்திரனாலடைத்து வைக்கப்பட்டிருந்த) நீர்கள் பெருக்கெடுத்தோடும்படி திறந்துவிட்டான்.—(எ-று.)

3. மேலுமோ பெரியீரிவ்வென் மேலிதாப் பிழிந்த சோமம்
சால மாருதர்காள் வேந்தன் றன்னொடுங் குடிக்க; சீரி
னேனுமின்னது காணீங்கள்பருகுவ தாக்கள் மாந்தர்க்
காலுறக்கண்டது; அஃதை மாந்திவேந் தகி கொன்றானே.

(இ-ள்.) மேலும், ஓ பெரியவர்களாகிய மருத்துக்களே! மேன்மையாகப் பிழிந்த இந்த ஸோமத்தை நீங்கள் இந்திரனோடும் பருகுக. இதுதான் நீங்கள் அவிபுணவாகக் குடிப்பது. மனிதர்களுக்குப் பசுக்களை (மழை நீரை யென்றபடி) கண்டறிந்தளித்தது. இச்சோமத்தைக் குடித்தே இந்திரன் விருத்திரனை (அகியை)க் கொன்றான்.—(எ-று.)

பிராஹ்மண: என்பதனைப் பிராமணர்களே என்று மேனாட்டாசிரியர் மொழி பெயர்ப்பர். பெரியவர்களாகிய மருத்துக்களே என இருபெயரொட்டாகப் புணர்ப்பர் ஸாயணர். கா: கன்றுகாலிகளென்பர் மேனாட்டாசிரியர். ஆனால் வ்ருஷ்டி லக்ஷணாநி உதகாநி (மழை நீர்கள்) என்பது யாஸ்கரை ஒட்டிய ஸாயணருரை. இவ்வகை வேத பதங்களை யெல்லாம் பொருளைக்கொண்டு உரை கூறாமல் (ரூடி) இடுகுறிப் பதங்களைப் போல உரை கூறுவதனால்தான் வைதிக இந்துக்கள் மேனாட்டுரைகளை ஒப்புக்கொள்வதில்லை. பண்டித குருதத்த வித்தியார்த்தியின் ‘வேத பதப்பிரயோகம்’ என்னும் நூலைப் பார்க்க.

4. பின்னு ரோதசி பிளந்து பெயருரு முறையின் வைத்தான்;
பின்னுறு மாவை முன்செ லிந்திர னஞ்சுவித்தான்;
நன்னரின் வளைத்து மூச்சு விடுகின்ற தானு மைந்தன்
றன்னருங்கட்டி னீங்கத்தடிந்தன னவன்மேற் பாய்ந்தே.

(இ-ள்.) இந்திரன் (பாரமைசுவரியத்தோடு கூடியவனென்பர் ஸாயணர்) பூமி வானங்களை இரண்டாக விரித்து அவற்றை அசையாத நிலையில் அமைத்தான். பின்னிட்டோடுகிற மிருகமாகிய தானவனை, (விருத்திரனை) நீரை வளைத்து மூச்சு விட்டுக் கொண்டிருப்பவனை, முன்னேறிச் செல்லுமிந்திரன் அந்நீர்களுடைந்தோடுமாறு அடித்துக்கொன்றான்.—(எ-று.)

மா, ம்ருகம் ம்ருகவத் பலாயமானம் மிருகத்தைப்போலப் பயந்தோடுவதை எனப் பொருளுரைப்பர் ஸாயணர்.

5. தேவரெல்லோருஞ் செல்வவந்தனே யுனக்குக் கன்மத்
தாவலிற் சோமபான மவரிச்சைப் படியே யீந்தார்
தாவுறு வடவை யென்றாழ் முன்னின்று பறப்பவற்றை
மேவுறு மேதசற்கா மெல்லச் செல்வித்த போதே.

(இ-ள்.) (மகவானே) செல்வவந்தனே! உன்னையடைந்த ஏதசன் என்றும் இருடிக்காக, சூரியனுக்குமுன் நின்று பறந்து (வேகமாய் என்றபடி) செல்லும் அவனது (பெண்) குதிரைகளை மந்தகதியோடு செல்லுமாறு நீ புரிந்தபோது, உனக்கு யக்ஞத்தில் எல்லாத் தேவர்களும் சோமக்குடியைத் தாங்களே தங்களிச்சையாக வளித்தார்கள்.—(எ-று.)

ஏதசன் மண். 1, சூக். 61, செய். 15; மண். 1, சூக். 121, செய். 13; மண், 2, சூக். 19, செய். 5 இவற்றிற் காண்க.

வருக்கம் 23.

6. அவன் றொண்ணூற்றொன்பான் கோட்டை யனைத்தும் வச்சிரத்திற் செல்வ
வுவன் பிளந்தெறிந்தகாலை மருத்துக்கள் சந்தித்துற்ற
குவவுத் தானத்தில் வேந்தைக் கூடியே திருட்டுப் வாக்கா
னவின்றனரரியைப் போற்றி; நலித்தனன் விளங்கன்னனை.

(இ-ள்.) மகவான் (செல்வம் வாய்ந்தவனாகிய இந்திரன்) அவனது (சம்பராசுரனது) 99 போகபுரங்களையும் தன்னிடத்திலிருந்த வச்சிராயுதத்தாற் பிளந்தெறிந்தபோது மருத்துக்கள் அந்த(ப் போர்க்களத்தில்) உயர்ந்த தலத்தில் அவ்விந்திரனைத் திருஷ்டுப் (இயற்சீரான் வந்த அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தமாகிய இச்செய்யுள் யாப்பால்) சந்தஸினால் அவனைத் துதித்துப் பிரகாசிப்பித்தார்கள், (அப்படி அம்மருத்துக்களால் துதிக்கப்பட்ட மந்திர) வெளிச்சத்தில் தோன்றிய அவனை (அச்சம்பராசுரனை) இந்திரனும் வாட்டினான்.—(எ-று.)

சம்பரன் 99 கோட்டைகளென்றதனுற் வருவிக்கப்பட்டது. மண். 1, ருக். 5, செய். 6 பார்க்க மேனுட்டாசிரியர் கடைசி வாக்கியத்தை; 'நீ திருஷ்டுப் மந்திரத்தால் வானைத் தடைசெய்தாய்' என மொழி பெயர்த்து உரத்துக் கூறிய அம் மந்திரம் வானை அடிக்கும்படி செய்தாய் என்று விளக்குவர். இவ்வெற்றுரையிலும் ஸாயணர் உரை சிறந்து நிற்பது காண்க. த்யாம் என்பதற்கு மருத்துக்கள் பாட்டால் ஒளிப்படுத்தப் பட்ட விடத்தில் காணப்பட்ட சம்பராசுரனை என்பது ஸாயணருரை.

7. தோழன் ஞேழனுக்காவல்லே சுவை பெறச் சமைத்தானங்கி
வாழுமுந்நூறு காரா மகத்தினின்; வேந்தன் மூன்று
பேழ்வயிற்றுக் குண்டங்கள் மனிதர்கள் பிழிந்துவைத்த,
காழகி கொல்வான், முற்றுங் குடித்தனன் கதியினேடே.

(இ-ள்.) ஸகாவாகிய அக்கினி தனது தோழனுகிய இந்திரனுக்காக 300 காராக்களை (எருமைகளை) யக்ஞ கர்மத்தில் விரைவிற் சமைத்து வைத்தான். விருத்திர வதத்துக்காக மூன்று பெறும்பாத்திரங்களில் (ஸாரம்ஸி ஏரிகளில் என்பது வாச்சியார்த்தப்பொருள்) மனிதர்கள் பிழிந்து வைத்த ஸோமம் முழுவதையும் இந்திரன் குடித்துத் தீர்த்தான் —(எ-று.)

மஹிஷா, காரா, எருமை, பசுக்கள் என்பார் ஸாயணர். எருமைகளும் யாகப்பசுக்களாக விருந்தனவென்று அவிநாச சந்த்ரதாஸர் தமது 'ரிக்வேத நாகரிகம்' என்னும் நூலிற் கூறுவர். (அந்நூல் 204-வது பக்கம் பார்க்க).

8. முச்சதக் காராப்பூழ்தி முனேந்து நீ தின்று மூன்று
நச்சுறு சோமக்குண்ட நீரினை மகவா னுண்ட
வச்சமயத்திற் பாம்பை யழித்த போதரிக்காப் போரி
னுச்சித வெற்றிக் கூச்ச விட்டனர் தேவர் யாரும்.

(இ-ள்.) மகவானே (செல்வவானுகிய இந்திரனே!) நீ முந்நூறு எருமைகளின் மாமிசத்தைத் தின்றபோதும், மூன்று குண்டம் ஸோம நீரைக் குடித்தபோதும், அகியை (விருத்திரனை)க் கொன்றபோதும் இந்திரனுகிய உனக்காக யுத்தத்தில் வெற்றி யுண்டாகுமாறு எல்லாத் தேவர்களும் பெருங் கூச்ச விட்டனர்.—(எ-று)

9. உசனனேடோட்டம் வன்மையுற்றமாக் கூட்டிக் குற்சன்
வசதியின் வேந்த வந்தகாலை யங்கொன்னுர் வீட்டி
வசமுறத் தேவரோடுங் குற்சனேடொரு தேர்வந்தாய்,
பசையறச் சுட்டுணன்னைப் பாற்றினுய் கண்டாய் நீயே.

(இ-ள்.) (உன்னுடைய பிரிய சிநேகிதனுகிய) உசனு காவ்யனும் நீயுமாக, இந்திரனே, குத்ஸனது கிருஹத்துக்கு வேகமும் பலமும் வாய்ந்த குதிரைகளோடு வந்தபோது சத்துருக்களை ஜயித்துக்கொண்டு குத்ஸனேடும் தேவர்களோடும் ஒரே தேரில் (ஸமானமாக) ஏறிக்கொண்டு வந்தாய். சுஷ்ணனை நன்ருகக் கொன்றனைகாண்.—(எ-று.)

10. சக்கரமொன்றை வேறு தறித்தனை, சூரியன்றன்
சக்கரமொன்றைக் குற்சற் குறுதனஞ் சாரச் செய்தாய்;
மூக்கிலாத் தசியுதம்மை முடித்தனை யாயுதத்தால்;
திக்கரித்துரைப்போர் தம்மைச் சின்னபின்னப்படுத்தாய்.

(இ-ள்.) (முன்பு இரண்டு சக்கரங்களோடிருந்த) சூரியனது ஒரு சக்கரத்தைக் கழற்றி யெறிந்தாய். (அவனுடைய) மற்ருெரு சக்கரத்தைக் குற்சனுக்குவேண்டிய செல்வத்தைத் தருவதாகப் பண்ணினுய். மூக்கில்லாத (வாயில்லாத ஊமைகளான என்பார் ஸாயணர்) தஸ்யுக்களை (கள்வர்களை) வச்சிராயுதத்தால் கொன்றனை. மதியாமல் விரோதித்துப் பேசுவோரை நன்ருக நாசப்படுத்தினுய்.—(எ-று.)

முக்கு, திஸைச்சொல் மூக்கு. மூக்கிலான் எனினும் வாயிலான் எனினும் எதிர் நின்று பேசத்தக்க கௌரவமில்லாதவன், மூங்கையான், ஊமையென்றே பொருள்படும். ஆனல் மேனுட்டுரைகாரர்கள் நாசியிலாதவர்களென்றதனுல் சப்பை மூக்கு அனுரியர்களென முடிவு செய்தது தவறென்றும் தஸ்யுக்கள் ஆரியர்களுக்குள்ளேயே கர்மத்தை விட்டவர்களென்று பொருள்படுமென்றும், ம்ருத்ர வாக்குள்ளவர்களென்பதற்குக் குழறிப் பேசுகிறவர்களென்பது பொருளானதுபற்றி அவ்வநாசாரவாரியர்களையே தஸ்யுக்களென்று கூறியதென்றும், இச்சொல் எழுபது முறை வருவதாக ‘மந்திர காலத்துப் புராதன இந்தியாவின் வாழ்க்கை’ என்னும் நூலில் ஸ்ரீமான். பி. டி. ஸ்ரீநிவாஸய்யங்கார் எழுதியுள்ளதையும் மேற்கோளாகக் காட்டுவர் ஸ்ரீமான். அவிநாச சந்திரதாசர் என்பவர். அவரது “ரிக்வேத நாகரிகம்” 157-வது பக்கம் பார்க்க.

வருக்கம் 24.

11. தோமங்கள் கௌரவீதி தோய்ந்தனவுனை வளர்த்த;
ஆமென விததினன்ருன் பெற்றவற்காகப் பிப்ரு
சேமமற் றழுங்கவிட்டாய்; ரிஜிச்சுவா னட்புக்காக
வேமவை சமைத்தா யன்னுன் மேதையை யுட்கொண்
டாயே.

(இ-ள்.) (இந்திரனே!) (இச்சூக்த ரிஷியாகிய) கௌர வீதியின் ஸ்தோத்திர கீதங்கள் உனது பலத்தை யதிகப் படுத்தின. விததினன் (Vidathina) புத்திரனுகிய ரிஜிச்வானுக் காகவேண்டிப் பிப்ரு என்னும் அசுரனை யவன் வசமாக்கினுய். (அந்த) ரிஜிச்வானுடைய சிநேகம் வேண்டுமென்று சமைக்கப் படவேண்டிய யக்ஞ வவிகளைச் (புரோடாசம்|முதலியவற்றை என்றபடி) சமைத்தாய். மேலும் அவன் தந்த ஸோமத்தை யும் குடித்தாய்.—(எ-று.)

ரிஜிச்வான், விததினன் புத்திரன். முன் மண். 4, சூக். 16 செய். 13-ல்,

"வலிமையினேனுங்கும் பிப்ரு மிருகய னிருவர் தம்மை
நலமுள விததி தோன்றல் ரிஜிச்சுவான் வசமணைத்தாய்."

என்று வந்துள்ளது காண்க. விததி, விததினன் ஈறு கெட்டது. மண். 1, சூக். 51, செய். 5 பார்க்க. வேமவை யென்றது சமைக்கவேண்டிய யவி புணவுகளை.

12. நவக்குவர் பிழிசோமத்தர் நண்ணுறுதசக்வர் வேந்தைத்
தவத்துதிக்கின்ருர் போற்றின்; தகைவுற்ற கவ்வியத்தை
யவிழ்த்தனர் முற்றும் போற்றினடைந்த வந்நரர்களெங்கு
நிவந்திடம் பெற்றுக் கீர்த்தி நீடிய வதனை மன்னே.

(இ-ள்) ஸோமம் பிழிந்து வைத்துள்ள நவக்வர்களும் தசக்வர்களும் இந்திரனை ரிக்குக்களால் நன்ருகத் துதிக்கின்ருர்கள். (அப்போது) ஸ்துதி கர்மத்தோடு கூடிய அந்த நேதாக்களாகிய ஆங்கிரஸர்கள் எல்லாவிடத்திலும் பரந்த கீர்த்தியோடு கூடியதும் (அசுரர்களால் பலமாகக்) கட்டுப்படுத்தி வைக்கப்பட்டதுமான கோசம்பந்தமுள்ளதை (மழை நீரை என்றபடி) நன்ருகத் திறந்துவிட்டவர்களானுர்கள்.—(எ-று.)

நவக்வர் 9 மாதத்திலும் தசக்வர் பத்து மாதத்திலும் ஸத்ர யாகஞ்செய்து பலனை யளிப்பவர்கள். இவர்கள் ஆங்கிரஸர்கள் மண். 1, சூக். 34, செய். 6, 1-62-4, 3-39-5, 4-51-4, இவற்றிற் பார்க்க. நரர்கள், நேதாக்கள், நடத்துவோர். சசமானா: என்பதற்கு ஸ்துதியாளர்கள் என்று ஸாயணர் கூறக் கர்மவான்களென மேனுட்டாசிரியர் உரை கூறுவர். கவ்யம், கோ ஸம்பந்தமுள்ளது. கவ்யம் மழை நீர் என்பது மண். 9, சூக். 7, செய். 3-லும் வருகிறது. மண். 4, சூக். 22, செய். 6 காண்க.

13. எவ்வகைச் சேவை செய்வேனெண்ணி நான்மகவானீசெய்
அவ்வகைச் செயல்கள் முற்றுஞ் செவ்விதி னறிந்திருந்தும்;
துவ்வுறுத்தமநீசெய்யும்புதுமைமேதோய்தொழில் கடம்மை
யிவ்வயின் மகக்கூட்டத்தி லியம்புவல் சிறக்க வல்லே.

(இ-ள்.) மகவானே! (செல்வவந்தனே யென்றபடி) நீ செய்து முடித்த அந்தச் செய்கைகளை யெல்லாம் நன்றாக அறிந்திருந்தும் உன்னை நான் எவ்வாறு (திருப்திகரமாக) ஸேவிப்பேன். உத்தம வலிமையோனே! இங்கு யக்ஞசாலையில் (எல்லார் முன்னிலையிலும்), நீ செய்யும் நவீன செய்கைகளை யெல்லாம் விரைவின் நன்றாக எடுத்துக் கூறுவேன்.—(எ-று.)

14. இவை பலவெலாம் புரிந்தாயிந்திர வான்ம வீரஞ்
சுவைபுறப் பெற்றே யொன்னார் தோய்வதற்கரியோய்; மாற்றார்
நவையுற வடக்குவோய் நீ விரைவினி னடத்துங் கன்ம
மிவைசெயு முன்பலத்தை நிவர்த்திப்போ ரெவருமில்லை.

(இ-ள்.) இந்திரனே! சத்துருக்கள் நெருங்கிச் சூழமுடியாதவனாகிய நீ உன்னிடத்திலேயே ஜனனமான சொந்த வீரியத்தினால் (கண்ணாற் காணப்படும்) இந்தப் பல உலகப் பொருள்களெல்லாவற்றையும் சிருஷ்டித்தாய். (இந்தப் பல காரியங்களை யெல்லாஞ் செய்தாய் என்பார் மேனாட்டாசிரியர்). சத்துருக்களை யடக்குகிறவனாகிய நீ விரைவிற் புரியு மிக்கன்மங்களைச் செய்யும் உனது பலத்தைத் தடைசெய்பவர்களும் யாருமில்லை —(எ-று.)

மாற்றார் இரண்டன்றொகை.

15. இந்திர பலத்தின் மிக்கோயிப்பொழு துனக்காச் செய்த
நந்து நூதன மறைக்க ணலக்கவின் பார்க ; சேலை
சுந்தர விழையிற் செய்தவவை யெனச்சொன்னம வேண்டி
வந்தனை யிழைத்தேன் றீரன் மருவுநற் கன்மன் றேரின்.

(இ-ள்.) இந்திரனே! பலோத்தமனே! உனக்காக இப்பொழுது நூதனமாகச் செய்யப்பெற்ற மந்திரத்தினிடத்துக் களிப்படைவாயாக. அழகாக நல்ல இழைகளால் நூற்கப் பெற்ற வஸ்திரத்தைப்போலச் செல்வகாமியாகிய நான், ஞானவானும் சோபனகர்மத்தோனுமாகிய ஒருவன் செய்த தேரைப் போல, உனக்காக ஸ்தோத்திரத்தைப் பாடினேன்.—(எ-று.)

இந்திரனால் ஏற்றுக்கொள்ளத் தக்கவை யென்பதைக் காட்ட வஸ்திரத்தை உவமையாகவும், பலனை யளிக்க வேண்டு

பவன் என்பதைச் சூசிப்பிக்கத் தேரை யுவமையாகவும் கூறி ருரென்பார் ஸாயணர். ஸ்தோத்திரத்தை, பன்மைப் பொருளில் வந்த ஒருமை, வந்தனேகளே என்றபடி.

வருக்கம் 25.

## 384 (30) மண்டலம் 5 அநுவாகம் 2 சூக்தம் 30.

15 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஆத்ரேயன் பப்ரு (Babhru).

வடமொழிச் சந்தம்; த்ருஷ்டுப்.

தேவதை: இந்திரன்; 12—15 ருணஞ்சயனும், இந்திரனும்.

1. எங்கவன் வீரன்? யாவர் கண்டனர் வேந்தை வேகிற்
றங்கமாரரி யிரண்டு தோய்ந் திழுக்குறு தேரோனேத்
தங்கமேந்திப் பிழிந்த சுதையனே விழைந்து சம்ப [தன்னே?
மிங்கணேந்தவனில செல்லும் பலர் துணேக்கழைப்போன்

(இ-ள்.) வீரனுகிய அவ்விந்திரன் எங்கே? அரியென்னும் குதிரைகளிரண்டும் வேகமாகப் பூண்டு இழுக்கும் சுகதரனும், தானநிமித்தம் தனத்தைக் கையிலேந்திக்கொண்டு ஸோமம் பிழியும யஜமானன் யாரென்று தேடி அவனுடைய வீட்டுக்குள் நுழையும் வஜ்ராயுதத்தனும், உதவிக்காகப் பலராலும் அழைக்கப்படுபவனுமாகிய இந்திரனே யார் கண்டார்கள்.—(எ-று.)

2. அவன் பதமறைந்து வன்மைசார்ந்ததை யறிவான்வேண்டிப்
புவனந்தாபித்த வன்னுன் புவனத்தைச் சார்ந்தேன்;
கவனமாய்ப் பிறரைக் கேட்டேனவருமேகரைந் [மேலுந்
தாரென்மாட்
டவனே யிந்திரனேப் புத்தி யணேநர ரடைவோ மென்றே.

(இ-ள்.) கண்ணுக்குத் தெரியாததும் உக்கிரமானதுமான அவ்விந்திரனது பதத்தை யறியவிரும்பி அகிலபுவனஸ்தாபகனுகிய அவ்விந்திரனது பதத்தை யடைந்தேன். (அடைந்ததோடு நில்லாமல் அங்குவந்திருந்த) பிறரையும் கேட்டேன். 'புத்தியோடுகூடிய நரர்கள் (நேதாக்களாகிய யஜமானர்கள்) ஆகிய நாம் அவ்விந்திரனே யடைவேமாக' என்று அவர்கள் சொல்லினர்.—(எ-று.)

எப்பொழுது இந்திரன் அறியப்படுகிறானோ அப்பொழுது கைக்கெட்டாது போகிறானது பற்றித் தொடர்ந்து செல்வோமாக என்றனர் என்றபடி. அறிந்தவர்களது தன்மையைக் கேட்டு அவர்கள் சுலபனென்றார்க ளென்னின் அவ்விந்திரனை யடையும் பொருட்டு இச் சூக்த மிச்சத்தைக் கண்ட தென்றது பொருள்.

3. இந்திர வின்று சோம மிறுக்கும்போ துனது செய்கை
நந்துறவெமக்காச் செய்த வவற்றினை நவில்வோ நன்மை
முந்துற வறிக மூடன்; அறிந்தவன் கேட்க; இந்தச்
சந்தமார் மகவான் சர்வ சேனையோன் சார்கின்றானே.

(இ-ள்.) இந்திரனே! இன்றைக்கு (உனக்காகச்) சோமம் பிழியும்போது நீ எங்களது திருப்திக்காகச் செய்த செய்கைகளை யெல்லாம் நன்றாக எடுத்துரைப்போம் (அவற்றை) அறியாதவன் அறிந்து கொள்ளட்டும். அறிந்தவன் (காது கொடுத்துக்) கேட்கட்டும். இந்தச் செல்வவானாகிய இந்திரன், எல்லாச் சேனைகளோடுங் கூடியவன் (அறிந்தார் அறியாதார் என்னும் இருவகைச் சனங்களையும் நோக்கிக் குதிரைமீது) வருகின்றான்.—(எ-று.)

4. உறுதியார் மனத்தை வேந்தே யுற்றனை பிறந்த போதே;
பெறுதிறற் பலரைப் போரிலேகனாய் வெலப் பேர்கின்றாய்;
அறுதிசாரப் பிளந்தாய் பலத்தினா லசுமங்கூடக்; [டாய்.
கறவையின் குழுவைப்பாலிற் றுளிப்பன வவற்றைக் கண்

(இ-ள்.) இந்திரனே நீ பிறந்தபோதே (பலவான்களைச் சயிப்பேன் என்னும்) உறுதிவாய்ந்த மனத்தினோடு பிறந்தாய். ஒருவனாகவே யுத்தத்திற் பலம்வாய்ந்த பலரையும் வெல்ல விரும்பிச் செல்கின்றாய். உனது பலதத்தினாற் கல்லையும் பிளந்தெறிந்தாய். பால்தரும் பசுக் கூட்டங்களைக் கண்டுபிடித்தனை.—(எ-று.)

அசுமம், கல் அல்லது மலை மேகங்களாகிய பசுக்களை ஒளித்து வைத்திருந்த மலை என்றும் அம்மலையே மழை நிறைந்த கருமுகிலென்றும் விசேஷப் பொருளுண்மை காண்க.

5. தூரத்துன்னதத் தோனாகத் தோற்றினை தோய்ந்த நாமந்
தூரத்துப்பரவ வெப்போ தப்பொழுதே துளக்கஞ்
சாரத் தேவரு நடுங்கித் தயங்கினர் வேந்தன் மாட்டு;
நீரத்தைத் தாசபன்னி யெவரையுஞ் சயித்தானன்றே.

(இ-ள்.) (இந்திரனே !) உன்னுடைய நாமம் தூரதேசங்களிலும் பரந்து நிற்க நீ எப்பொழுது தூரத்தே உத்கிருஷ்டதமனாகப் பிறந்தாயோ அப்பொழுதே தேவர்களுங்கூட இந்திரனிடத்துப் பயத்தை யடைந்தனர். தாசனாகிய விருத்திரனுக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்த பத்தினிகளாகிய எல்லாத் தண்ணீரையும் அவன் தன் வசப்படுத்தினான்.—(எ-று.)

நீ என்று முன்னிலையாகத் தொடங்கி இந்திரனிடத்து எனப் படர்க்கைப் படுத்தார். இது வேத வழக்கு. தாசன் விருத்திரனென்றும் பத்தினிகள் அவனாற் கட்டப்பட்டிருந்த நீரென்றும் கொள்க.

வருக்கம் 26.

6\. உனக்கென்றே யிம்மருத்தர் சோபனச் சுகத்தினுற்றோர்
மனத்தெணித் துதிகள் போற்றி மகிழினைப் பிழிகின்றாரால்;
கனத்ததன்வலியால் வேந்தன் கபடனை நீர்மேற் றூங்கிச்
சினத்திடை யூறளிக்கும் மகியினைச் சிதைத்தா னன்கே.

(இ-ள்.) சோபன ஸுகத்தோடு கூடிய இந்த ஸ்தோதாக்கள் (மருத்துக்கள்) உனக்கென்றே ஸ்துதியை எடுத்துரைக்கின்றனர் ; ஸோமத்தைப் பிழிகின்றனர். பரம ஐசுவரியத்தோடு கூடிய இந்திரன் தனது மிகுந்த வலிமையினால் தேவர்களுக்கு வாதையளிப்பவனும், தண்ணீரின்மீது படுத்துக்கொண்டிருப்பவனும் கபடனுமான அஹியை (விருத்திரனை) நன்றாக ஒடுக்கினான்.—(எ-று.)

(மஹத்ரவந்தி வதந்தி இதி மருத: ஸ்தோதார :) பலமாக அரவமிடுவோர் அல்லது உரைப்பவர்கள் என்பது மருதர் என்னும் சொல்லின் உண்மைப் பொருளானதுபற்றி மருத்துக்கள் (அல்லது மருத்தர்) என்பதற்கு ஸ்தோதாக்கள் அல்லது போற்றுளர் என்று ஸாயணர் உரை கூறினார். செய்யுளிலும் இம் மருத்தர்' என்பதை 'இப்போற்றுளர்' என்று பாடாந்தரமாகக் கூறலாம்.

7\. நன்கழித்தனை செல்வத்தோய் பிறவித்தெவ்வரை யெம்
நன்குரப்புற்ற நீ யுன் சம்பத்தாலகி நலித்தே, [போற்றின்
நன்றினை மனிதர்க்கெண்ணி நமுசியாந் தாசன் செய்த
முன்புறு போரிலன்னான் முடியினைப் பொடித்தகாலை.

(இ-ள்.) மகவானே (செல்வம் வாய்ந்தவனே)! (நமுசி என்னும் அசுரனால் அபகரிக்கப்பட்டுச் செல்வமிழந்த) மனிதர்களாகிய எங்களுக்கு நன்மை செய்ய விரும்பித் தாஸனாகிய நமுசியோடு செய்த போரில் அவனது தலையைப் பொடி செய்தகாலத்து, எங்களுடைய ஸ்தோத்திரங்களால் நன்கு தூண்டப்பட்ட நீ (தானம்) விருத்திரனை வச்சிராயுதத்தால் வாட்டி உனது ஜன்ம சத்துருக்களாகிய ராட்சஸர் முதலியவர்களை நன்றாக அழித்தாய்.—(எ-று.)

தானம் என்னும் வடமொழி மூல பதத்துக்கு தேவராை வதைக்கும் விருத்திரன் (செய்யுளில் அகியென்றார்) என்று ஸாயணர் உரை கூறுவர். அவரே கவா என்னும் சொல்லுக்கு வச்சிராயுதத்தால் என்று பொருள் கூறினர். ஆனால் மேனாட்டாசிரியர் (Griffith) அச் சொல்லுக்குக் கொடுப்பவனை என்றும் கவா என்பதற்குப் பால் என்றும் பொருள் கொண்டு எங்களது ஸ்தோத்திரங்களால் நன்கு தூண்டப்பட்ட நீ விருத்திரனை வாட்டி என்பதற்குப் பதிலாகப் "பாலினிடத்து உவப்புக்கொள்ளுகையில் கொடையாளியைத் தூண்டிக்கொண்டு" என்று பொருளுரைப்பதோடு தானம் என்னும் சொற்பொருள் ஐயப்பட நிற்பதென்பார்.

8. கூடுறச்செய்தாயென்னைக் கோபதி யுருமு தன்னோ
டோடுறு மேகமென்னத்தாசனு நமுசி யுவ்வி
வாடுறப் பொடித்த பின்பே; மருதராற் பூமிவானம்
பாடுற வமைந்துநின்ற சக்கரம் போன்று நன்கே.

(இ-ள்.) இந்திரனே! சப்தத்தோடு செல்கின்ற மேகத்தைப்போலத் தாஸனாகிய நமுசியினது தலையை நன்றாகப் பொடிசெய்த பின்னரே என்னை உனக்குத் தோழனாகக் கூடியுறும்படி செய்தாய். அப்பொழுது மருத்துக்களால் பூமி வானங்கள் சக்கரங்களைப்போல நன்றாக அமைக்கப்பெற்று நின்றன.—(எ-று.)

உவ்வி, தலை. கோபதி, இந்திரன். இவ்விருக்குக்கு மேனாட்டாசிரியர் உரை சிறப்பில்லாததும் விளங்காததுமானதோர் உரையாகும். நமுசி (Namuchi) நுரையினால் தன்னை மூடிக்கொண்டு தண்ணீருக்குள் செல்லும் அசுரனென்பதை மண். 2, சூக். 14, செய். 5—ன் உரையிற் பார்க்க.

9. மாதரைக் காணுந் தாதன் வயக்கினன் படையா; வன்மை
யோதலில் சேனையாவா ருவனவரென்னை யென் செய்வார்?
காதலி யிருவர் தம்மைக் கண்டறிந் துள்ளடைத்துத்
தாதனை வேந்தன் போரிற் சதித்திட முன் வந்தானே.

(இ-ள்.) தாசனாகிய நமுசி ஸ்திரீகளைத் தன் சேனையாக வமைத்தான். அபலைகளாகிய அவனது சேனா ஜனங்கள் (ஸ்திரீகளென்றபடி) என்னை என்ன செய்யக் கூடும்? (இப்படி எண்ணிய இந்திரன் அவனுக்குகந்த நல்லுருவோடு கூடிய இரண்டு மாதர்களை உள்ளறையி லடைத்து வைத்துவிட்டுப் பிறகு தாஸனாகிய அந்நமுசியைப் போரில் கொல்ல முன்னோக்கி வந்தான்.—(எ-று)

மேனாட்டாசிரியர் தேனே உபே என்பதற்கு இரண்டு குரல்களையும் எனப் பொருள் கொள்வர், ஆண் பெண் இரு குரல்களையும் பகுத்தறிந்து பெண் குரலை விலக்கி ஆண் குரலோடு கூடிய தாஸனோடு போருக்கு வந்தான் என்பர். முன்னிரண்டடி இந்திரன் கூற்று முன்னிரண்டடியோடு பின்னிரண்டடியைத் தொடர்ப்படுத்த ஸாயணர் ‘என்றெண்ணிய’ என்னும் தொடர்மொழியைக் கூட்டுவர்.

10. ஆக்களெப்பொழுது கன்றையகன் றங்குமிங்குமாகப்
போக்கினிற்கிடந்த, சோமம் பூரணமாப் பிழிந்து
வாக்கிய தெப்போதப் போதெறுழின ரோடு மன்ன
னாக்கமொடவற்றை மீட்டு மொன்றுவித்தான் கன்றோடே

(இ-ள்.) பசுக்கள் எப்பொழுது தங்கள் கன்றுகளைப் பிரிந்து அங்குமிங்குமாக அலைந்தனவோ, எப்பொழுது பப்ரு ரிஷியினாற் பிழிந்தளிக்கப்பட்ட சோமமானது இந்திரனுக்கு ஊக்க மளித்ததோ அப்பொழுது இந்திரன் பலத்தினராகிய மருத்துக்களோடு கூடி (நமுசியினால் அபகரிக்கப்பட்ட) அப் பசுக்களை தங்கள் கன்றுகளோடு மீண்டும் சேர்த்தனன்.—(எ-று.)

மன்னன் மோனைக்காக வேந்தன் இந்திரனென்னும் பொருளில் வந்தது. வாக்குதல், வடித்தல், வார்த்தல். எறுழினர், சக்திவாய்ந்த்வர், (சாஸை: என்பது மூல பதம்) ஈண்டு மருத்துக்களைக் குறித்தது.

## வருக்கம் 27.

11. பப்புரு பிழிந்த பான மிவன்மதம் பழகச் செய்த
வப்பொழு திடபஞ் சத்த மாற்றினான் சதனந்தன்னில்;
துப்பினிற் புரம்பொடித்தோ னிந்திரனதைக் குடித்த
வெப்பினின் மீண்டு மீந்தான் பால்துளி மடியினாவை.

(இ-ள்.) பப்ரு (Babhru) என்னும் இக்சூக்த ரிஷி பிழிந்தளித்த ஸோமங்கள் இவ்விந்திரன் ஸந்தோஷ மடையும்படி

செய்தபொழுது இச்சைகளைத் தருங் காளையாகிய அவ்விந்திரன் (சதனத்தில்) யுத்தாங்கத்தில் பெருஞ் சத்தமிட்டான். எதிரிகளது கோட்டைகளை யழிப்பவனாகிய இந்திரன் அச்சோமத்தைக் குடித்துப் பால் துளிக்கு மடிகளோடு கூடிய பசுக்களை மீண்டும் (தான் ஸோமங் குடித்ததற்குப் பிரதிப்ரயோஜனமாக வென்பர் மேனாட்டாசிரியர்) பப்ரு ரிஷிக்குக் கொடுத்தான்.—(எ-று.)

இச்சூக்த ரிஷி, ருணஞ்சயனது குடிகளாகிய ருசமர்களுக்கு உதவியாக இச்செய்கையை நடத்தி, அதற்காக அவர்கள் பிரதிப்ரயோஜனஞ் செய்த விஷயம் அடுத்த செய்யுளிற் காண்க.

12. மங்கல முற்ற விக்கன் மத்திரனைப் புரிந்தா ராக்க
ளங்கியே ருசமர் தந்தா ராயிர நான்மடங்கை ;
பொங்கு நேதாக்கடம்மி லுத்தமன் ருணம் சயன்றன்
அங்கமாயளித்த செல்வ மவற்றினை யடைந்தேற்றேமே.

(இ-ள்.) அக்கினியே! (ருணம்சயனது ஜனங்களாகிய) ருசமர்கள் கல்யாணகரமான இந்தக் காரியத்தைச் செய்தார்கள். (அதாவது) 4000 பசுக்களை எனக்கு அளித்தார்கள். நேதாக்களுள் உத்தம நேதாவான ருணம்சயன் அன்போடு தந்த பசுச் செல்வத்தை நாம் பிரதிக் கிரஹணம் செய்தோம்.—(எ-று.)

செய்தோம் மரியாதைப் பன்மை. நேதா, வீரன் அல்லது யக்ஞ நடத்துவிக்கும் ஸூரி. ருசமர், ருணம் சயனென்னும் ராஜாவின் கிங்கரர் என்பார் ஸாயணர்.

13. அணியொடாயிரம் பசுக்களோடெனை யனுப்பினர்கள்
பணிவுறு ருசமர் வீட்டுக் கங்கியே ; இரவுபாறித்
திணியிருள் சீத்து வைகல் சேர்ந்தபோ திந்திரன்னை
மணிபெறு துளிகளென்றற் பிழிவுற்ற மதமிழைத்த.

(இ-ள்.) அக்கினியே! எனது ரூபத்தை வஸ்திரம் முதலியவற்றால் அலங்கரித்ததோடு ஆயிரக் கணக்கான பசுக்களோடும் என்னை எனது கிருஹத்துக்கு ருசமர்கள் அனுப்பினார்கள். (அதன்பிறகுதான்) இரவு தீர்ந்து இருட்டெல்லாம் மாறிக் கிழக்கு வெளுக்கும் உஷஸ் காலத்தில், நான் பிழிந்தளித்த ரஸவத்தான ஸோமத் துளிகள் இந்திரனுக்கு ஸந்தோஷத்தை விளைத்தன.—(எ-று.)

ஆயிரம், ஆயிரக் கணக்கென்றுரை கூறினார் மேற் செய்யுளில் 4000 என்று கூறப்பட்டிருப்பது பற்றி. பணிவுறு எது கைக்காகச் சேர்த்தது ருசமர், ருணம்சயனது பிரஜைகள். மணிபெறு, அழகுபெறு, சாரம் மிகுந்த, ரஸவத்தான.

14. விடிந்த தவ்விரவு சூழ்ந்த விருள்கழிந்து ருசமர் வேந்தன்
அடைந்தனன் ருணம்சயன் தானப்பொழுது; அசுவமென்
தடையறு நடையின் வேகந்தாங்கிய பப்ரு நான்கு [னத்
முடையறு பசுக்க ளாயிரக் கணக்கடைந்தான் முன்னர்.

(இ-ள்.) ருசமர்களது அரசனாகிய ருணம்சயன் வந்தபோது இரவெல்லாம் போய் விடியற்காலமாயிற்று. எப்பொழுதும் வேகமாகச் செல்லும் அசுவத்தைப்போல பப்ருவென்னும் இச்சூக்த ரிஷி நாலாயிரம் பசுச் செல்வத்தை முன்னர் அடைந்தான்.—(எ-று.)

15. நான்குறு மாயிரத்த பாற்பசு நலக்கப் பெற்றேம் [தம்
பான்மையின் ருசமர்பக்கல், அக்கினி ; ப்ரவ்ருஞ்சனுர்த்
வான்றரு நிறக்கடாரம் வயங்கய மயத்ததஃதை [டத்தே
யான்றவ ரடைந்தேஞ் சூட்டிற் பால் பெய்பாக் கவரி

(இ-ள்.) அக்கினியே! ருசமர்களிடமிருந்து நாலாயிரம் கறவைப் பசுக்களை யடைந்தோம். (ஸோமயக்ஞஞ் செய்வதற்குமுன் நடத்தும்) பிரவர்க்கியத்துக்காகச் சூடான பாலைக் கொட்டிவைக்கும் (மஹாவீரம் என்னும் பாத்திரத்தைப் போன்ற) பளபளப்பாகப் பொன் போல் விளங்கும் அய கலசத்தையும் (அவர்களிடமிருந்து) விப்பிரர்களாகிய யாங்கள் பெற்றோம்.—(எ-று.)

கடாரம் உவமத்தொகையாகக் கொள்க. மேனாட்டாசிரியர் கடாரத்தையே பெற்றதாகக் கூறுவர். செய்யுளிற் பொதுப் படவைத்தார்.

வருக்கம் 28.

## 385 (31) மண்டலம் 5 அநுவகம் 2 சூக்தம் 17.

13 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஆத்ரேயன் அவஸ்யு. வடமொழிச் சந்தம்: த்ருஷ்டுப்.

தேவதை: இந்திரன். 8-வது ரிக் பின்னடிக்குக் குத்ஸன் அல்லது உசனன்; 9-வது இந்திர குத்ஸர்கள்.

1. இந்திரன் மகவான் வாச மியையத்தா னேறி நின்ற
வெந்திர மதனைக் கீழ்நோக் கெய்துறப் புரிகின்றனல்;
நந்தனுமந்தை யோட்டல் நேரப்பொன்னுடி யாற்றூர்த்
தொந்தரை யிலாதான் செல்லுகின்றனன் முதன்மை
தோய்ந்தே.

(இ-ள்.) செல்வவானாகிய இந்திரன் (வாஜம்) பலம் அல்லது உணவு பொருந்துமாறு தான் ஏறி நின்ற தேரைக் கீழ்முகமாக (யுத்தத்தை நோக்கிச்) செல்லுமாறு செய்கிறான். சத்துருக்களால் இம்சிக்கப்படாத வவன் எல்லாருக்கும் முதன்மையனாய் சத்துருக்களுடைய செல்வத்தை நாடி இடையன் பசுமந்தையை விரட்டிவிடுவது போல விரட்ட (அவர்களை நோக்கி)ச் செல்லுகிறான் —(எ-று.)

N. P. வாஜம், வாசம் என நின்றது; பலம் அல்லது உணவு என்று இரண்டு பொருள் அச்சொற்குண்டு.

2. அரிவனே யெம்மைநோக்கி வேகமாயணைக; எம்மாட்
டெரிபிரியென்று வீழல்; இந்திர, தனம்பல் ரூபத்
துரிமைய, வெம்பாற்சார்க; உன்னிற் பேர்வாய்ந்தோனில்லை
தருகிறாய் மனைவி மேனை யற்றவன்றனக்கு மீண்டே.

(இ-ள்.) ஹரீ என்னும் இரண்டு குதிரைகளுள்ளவனே! எங்களை நோக்கி வேகமாக வருவாயாக. எம்மீது கோபித்துக்கொள்ளா திருப்பாயாக. இந்திரனே! பலரூபத்தோடு வாய்ந்த செல்வத்துக்குரியவனே! எம்மைக்காக்க வருவாயாக. உன்னைக்காட்டிலும் கீர்த்திவாய்ந்தவன் ஒருவனில்லை. மனைவியில்லாதவனுக்கும் நீ (இங்கு) மனைவிகொடுக்கிறாய்.—(எ-று.)

எரிபிரீ, கோபக்குறி தோற்றுவதோர் வழக்குச் சொல். மேனை, ஸ்திரீ; மேனாசப்த ஸ்த்ரீவாசி என்பார் ஸாயணர். பிசங்கராதே, பலவுருவத்தோடு கூடியதனத்தோடு கூடிய விந்திரனே என்று ஸாயணர் கூறுவர். ஆனால் மேனாட்டாசிரியரோ, பொன்னிறமான அவ்யோடு கூடியவனே என்று பொருள் கூறி மஞ்சள் நிறமான ஸோமரஸத்தை விரும்புபவனே என்று விரித்துரைப்பர்.

3. சகஞ்சகசத்தினின்றும் வெளிப்பட்ட சமயந் தன்னிற்
சகலவிந்திரியமுங் கண்சார்த்துவான் வேந்தன்; நல்லாக்
குகையுள கறவை தம்மைக் கூட்டினானோட்டித்; தேசால்
புகையென மூடி நின்ற தமத்தினைப் போக்கினனே.

(இ-ள்.) (ஸஹஸத்தினின்றும்) உஷஸினது தேஜஸினின்றும் (ஸஹம்) ஸூர்ய தேஜஸானது மேல் நோக்கி வெளிவந்த போது இந்திரன் தனது (இந்திரியங்கள்) தனங்களெல்லாவற்றையும் காட்டுகிறான். மலைக்குகையினுள் அடைத்து வைக்கப்பட்டிருந்த நல்ல கறவைப் பசுக்களை வெளியிலோட்டிவிட்டான். தனது தேஜஸினால் (புகைபோல) மூடியிருந்த இருட்டை நீக்கினான்.—(எ-று.)

முதல் வாக்கியத்துக்கு மேனாட்டாசிரியர், (Griffith) பலத்திலிருந்து வெற்றி பெறும்பலம் தோன்றியபோது இந்திரன் தன்னிடத்திலுள்ள சக்தியை யெல்லாம் காட்டினான்'' என்று பொருள் கூறுவர். ஸஹ: சகம், ஸூர்யதேஜஸென்பர் ஸாயணர்; பலமென்பர் மேனாட்டாசிரியர். ஸஹஸ: சகசம், உஷஸினது தேஜஸென்பர் ஸாயணர், ஸாஹஸம் எனக் கொண்டு வெற்றிக்குரிய பலமென்பார் மேனாட்டாசிரியர். புகையென என்னும் சொற்றொடர் எதுகை நோக்கிச் சேர்த்தது. மூலத்திலில்லை. இந்திரியம் தனமென்பார் ஸாயணர், பல மென்பார் மேனாட்டாசிரியர்.

4\. அநவருன் றேரமைத்தா ரசுவத்திற்காகச்; செய்தான்
கனவயிரந் துவட்டா, கணக்கிலாரழைக்க நிற்போய்,
மினலொடும்; வணங்குகின்றோர் மறையினர கியை வீட்ட
வுனதெறுழ் வளர்த்தார் தங்களோங்கிய துதிகளானே.

(இ-ள்.) புருஹூதனே! உனது குதிரைகளுக்காக அநவர்கள் (ரிபுக்களென்பார் ஸாயணர்) தேரைச் செய்தார்கள். துவஷ்டா (உனக்காக) வச்சிராயுதத்தைக் காந்தியோடும் செய்தான். உன்னைப் பூஜிக்கின்றவர்களாகிய பிரஹ்மாணர்கள் (ஆங்கிரஸர் அல்லது மருத்துக்களென்பார் ஸாயணர்) விருத்திர வதத்திற்காகத் தங்கள் ஸ்தோத்திரங்களால் உனது பலத்தை விருத்தி செய்தார்கள்.—(எ-று.)

அநவ: (மநவோ மநுஷ்யா ருபவ:) மனுக்கள் மனிதர்கள் அதாவது ரிபுக்கள் என்று ஸாயணர் உரைகூற, அனுக்கள் என்னும் ஜாதியார்கள் என்பார் (Griffith) மேனாட்டாசிரியர். புருஹூதன், பலராலும் அழைக்கப்படுபவன், இந்திரன், கணக்கிலாரழைக்க நிற்போய் என்றார் செய்யுளில். மறையினர், ப்ரஹ்மாண: மறைகளைக் கூறும் ஆங்கிரஸர்கள் அல்லது சூழ்ந்து செல்பவர்களாகிய மருத்துக்களென்று ஸாயணர் உரைகூற மேனாட்டாசிரியர் பிராமணர்கள் என்பர். அஹி, அகி, விருத்திரன். எறுழ், வலிமை.

5. காளையா முனக்கு வேண்டிக் காளைகள் துதி யெடுத்த
வேளையின் வேந்தே கூடி நின்றன ரதிதி கற்கள்;
ஆளுறு மசுவமின்றித் தேரின்றி யரி தூண்டப் பெற்
றோளியிற்றசியுதம்மை யொறுத்துச் செல் நடையினோரே.

(இ-ள்.) இந்திரனே! இச்சைகளைத் தருபவனாகிய உனக்கு மழை பெய்விக்கும் திறமைவாய்ந்த மருத்துக்கள் ஸ்தோத்திரங்களைக் கூறியபோது தீனமற்ற ஸோமா பிஷவணக் கற்கள் கூடி நின்றன. (அம்மருத்துக்களின் றன்மையைப் பின்னிரண்டடியிற் சொல்லுகிறார்.) தாங்கள் கையாளக் குதிரைகளுமில்லாமல் தேருமில்லாமல் இந்திரனால் தூண்டப் பெற்றவர்களாய் (ஒழுங்காக)த் தஸ்யுக்களை யடக்கியாளும் நடை வாய்ந்தவர்களாகிய அம்மருத்துக்கள் (துதியெடுத்த போதென இயைத்துப் பொருள் கொள்க).—(எ-று.)

விருஷ்ணே! காளையே! அதாவது 'காமா நாம் வர்ஷித்ரே,' இச்சைகளைக் கொடுத்தருள்பவனே என்பது பதப்பொருள். அரி, இந்திரன். ஒளி (ஒழுங்கு) எதுகைக்காகச் சேர்த்தது. ஆளுறுமென்பதும் அப்படியே. தஸ்யு இம்சிக்க விரும்புவோர் என்பது பதப்பொருள். தாஸரும் தஸ்யுக்களும் வைதிக நம்பிக்கை யற்றவரும் வைதிகரை யிடுக்கணிக்க விரும்புவோருமாகிய ஆரியரே யென்றும், வைதிக மதம் பலப்பட்டபின்னர் இவர்களை ஆரியக் கூட்டத்தினின்றும் புறம் பாக்கினதன் காரணம் கர்மமற்றவர்களாகப் போனமையினென்றும் அவிநாச சந்திர தாஸர் தமது ரிக்வேத நாகரிகம், என்னும் நூலிற் கூறுவார். யு, விருப்பமுள்ளவன் என்னும் பொருளில் வரும் விகுதி. தஸ்யு, அத்வர்யு, வஸூயு: முதலிய பதங்களை நோக்குக. அதிதிக்ராவாண: என்பது வடமொழி மூலம்; தீனமற்ற (ஸோமம் நசுக்க உபயோகப்படும்) கற்கள் என்று ஸாயணர் உரை கூறுவர். அதிதியும் கற்களும் ஒன்று கூடின வென்பார் மேனாட்டாசிரியர்.

வருக்கம் 29.

6. நன்னர் நீ செய்த கன்மம் பழைமைய நூதனத்த [பூமி
வின்னவை, மகவான், சொல்வேன், சந்தியினியைந்தோய்
யுன்னத வானிரண்டு முன்வச முறப் பிரித்துத் [கென்றே.
துன்னு பன்னிற நீர்தன்னைத் தோய்த்தனை மாந்தர்க்

(இ-ள்.) மகவானே (செல்வவானாகிய இந்திரனே என்றபடி), நீ செய்த பழைய கர்மங்களையும் நூதன கர்மங்களையும் நன்றாக எடுத்துரைப்பேன் சக்திமானே! (சக்தி அல்லது

வச்சிராயுதத்தோடு கூடியவனே என்றபடி) பூமி வானங்களை உன்வசமுறும்படி பிரித்துச் சித்திர வொளிகளோடு கூடிய நீரை மனிதர்களுக்காகத் தோய்த்தாய்.—(எ-று.)

7. காண்பதற்கினி யோய்விப்ர கடுமுரணகியைக் கொன்றிங்
காண்டதைத் தோற்றுவித்த வதுகண்டா யுனது கன்மம்;
பூண்டசுட்டுணன்றன்மாயைபொருந்திக்கைப்பற்றினுய்;போ
ரீண்டி வந்திடுக்க ணெண்ணத்திவர்களை யோட்டிவிட்டாய்.

(இ-ள்.) காட்சிக்கினியனே! (தஸ்ம) விப்பிரனே! (மேதாவியே) இவ்வுலகத்து அஹியாகிய விருத்திரனைக் கொன்று வெளிப்படுத்திய உனது பலமாகிய அதுகாண் உனது கருமமென்றது. சுஷ்ணனது (பெண்களாகிய) மாயைகளை யடக்கிக் கைக்கொண்டனை. யுத்தத்தில் நெருங்கிப்போய் தஸ்யுக்களை (இம்சிக்கும் எண்ணம் வாய்ந்தவர்களை)த் தோற்ருேடும்படி செய்தாய்.—(எ-று.)

சுஷ்ணன் மண். 1 சூக். 5 செய். 6 பார்க்க. மாயைகளை யவனது புத்திரிகளென்ருர் ஸாயணர். தஸ்யுக்களை என்ற சொல்லை இடுக்கணெண்ணத்திவர்களை என்னும் பதப்பொருளாற் குறிப்பித்தார் மூலத்தில். அஸுரர்களை என்பார் ஸாயணர், தேவர்களும் அசுரர்களும் வைதிக கர்மங்களில் நம்பிக்கையுள்ளவர்களும் இல்லவர்களுமாகிய ஆரிய வகுப்பினரென்பது கருதத்தக்கது. தற்கால வழக்கில் அவர்களை இந்து ஆரியர்களும் பார்ஸி ஆரியர்களுமெனவறிக. ஒருவகுப்பார் திவ்ய ஒளியிலும் அறிவு விளக்கத்திலும் நம்பிக்கையுள்ளவர்கள்; மற்ருெரு வகுப்பார் பலத்தில் நம்பிக்கையுள்ளவர்களென்ப.

8. இந்திர கரைகடந்தே யோடிய வெளந்தடுத்தாய்
அந்தில் துர்வசனுக் கான்ற யதுவுக்கா; நீவிர் உக்ரன்
நந்துறச் சென்றீர்; குற்சனடத்தினை, யுசனன் றேவர்
முந்தவும் மிருவர் தம்மை மொய்த்த வப்போது மன்னே.

(இ-ள்.) இந்திரனே! யதுவுக்காகவும் துர்வசனுக்காகவும் கரைகடந்து மரஞ்செடிகளை நன்ருக மோதிக்கொண்டு செல்லும் வெள்ளமானது அக்கரையைத் தாண்டாதபடி செய்தாய். நீயும் குத்சனுமாகிய இருவரும் உக்கிரனுகிய சுஷ்ணன் மடியும்படி செய்தீர்கள். உசனனும் தேவர்களும் உங்களிருவரையும் கூடிய வப்போது குற்சனை ஜாக்கிரதையாக அவனது கிருஹத்திற் சேர்த்தாய்.—(எ-று.)

யது, துர்வசன், இருவரும் அப்பெயர் தாங்கிய குடிகளின் அரசர்கள் மண். 1, சூக். 108, செய். 8 நோக்குக. உக்

ரன் என்றது ஈண்டு சுஷ்ணனை. நந்துற, நாசமடைய. உசனன், பார்க்கவன், உசனுகாவ்யன் என்பவனும் அவனே. குத்ஸனும் இந்திரனும் சுஷ்ணனைக் கொன்முர்களென்றதனுல் இவ்விருக்கின் பின்னடிக்கு இந்திரனேடு குத்ஸன் தேவதையானுன். தேவர்களோடு (சுக்கிர) பிருகு வம்சத்து உசனனும் வந்ததால் உசனனும் தேவதையானுன்.

9. இந்திர குற்சீ ரும்மைத் தேரினேற்பித்து வேக
முந்துறு பரிகள் போற்றுச் செவியுறு மிட முடுக்க;
சிந்துவைச் சூழ்ந்து சென்றவவனை யன்னுன்றலத்தே
சிந்தினீர்; மகோனனெஞ்சத்திருளெலாஞ் சிதைத்தீர் நன்கே.

(இ-ள்.) இந்திர குத்ஸர்களே! வேகமாகச் செல்லும் அசுவங்கள் உங்களிருவரையும் தேரின்மீது ஏற்றிக்கொண்டு போற்றுளனது ஸமீபத்தில் விரைவாக வரட்டும். தண்ணீருக்குள் ப்ரவஹித்துச் செல்லும் சுஷ்ணனுகிய அஸுரனை அவனிருந்த இடத்திலேயே வதைத்துக் கொன்றீர்கள். செல்வம் தாங்கிய யாக கர்த்தாவினது மனத்திலிருந்த அஞ்ஞான அந்தகாரங்களை யெல்லாம் நீக்கினீர்கள்.—(எ-று.)

கர்ணே என்பதற்கு ஸ்தோத்திரஞ் செய்பவன், ஸ்தோதாவெனப் பொருள் கூறுவர் ஸாயணர். ஆனுல் போற்றுக்கள் காதிற்படுந் தூரத்தில் என்பது மேனுட்டாசிரியர் உரை. சிந்தினீர், கொன்றீர் என்னும் பொருளில் வந்தது. மகோனன் அவிப்பொருள்களுக்கான செல்வத்தை யளித்ததால் யாககர்த்தாவாகிய யஜமானுக்குப் பெயராயிற்று.

10. வாயுவேகத்து நன்னர்க் கூடிய வசுவந்தம்மைத்
தோயுமிக்கவி யவஸ்யு தானுந் தோய்ந்தனன்; உன் எல்லா
நேயரா மருதர்தாமு மிந்திரவிண்டுன் மைந்தைத்
தோயுநன் மறைகள் கொண்டு வளர்த்தனர் சுவைக்க
வின்னே.

(இ-ள்.) வாயுவினது வேகத்தோடு நன்ருகக் கூடியுள்ள அசுவங்களை இந்தப்பிராக்ஞனுகிய அவஸ்யுவுங் கூட (அவஸ்யு துணை விரும்புபவனென்பது பதப்பொருள்) நெருங்கிச் சேர்ந்தான். உனக்குச் சகாயஞ் செய்யும் எல்லாமருத்துக்களும், இந்திரனே, நல்ல மந்திரங்களாற் புகழ்ந்து உனது பலத்தை விருத்திசெய்தனர்.—(எ-று.)

வருக்கம் 30.

11. சூரனின் தேரைக்கூடச் சூழ்ந்துசெல் லோட்டத்தற்றை
ஆரும் வேகத்ததலைத யோய்ந்துற வாற்றுவித்தான்
சாருமேதசற்கா; நன்கு சதித்தனன் முன்னர்த்தந்து
நேருற வெம்மகத்தே நிலைபெறச் சேருவானே.

(இ-ள்.) ஏதசன் என்னும் ரிஷிக்காக அவனுக்கும் சூரியனுக்கும் நடந்த யுத்தத்தில் முன்பு வேகமாகச் செல்லும் சூரியனுடைய தேரைக்கூட நிறுத்தினன் இந்திரன். (அவனே அசுரர்களை) நன்றாக வாட்டினன். எங்களை முன்னர்க் கொண்டு வந்து வைத்து எங்களது யக்ஞத்தினிடத்து வந்து சேருவான் (சேரட்டும் எனப்பிரார்த்தனையாகக் கொள்வர் ஸாயணர்.)—(எ-று)

ஏதசன் என்னும் பெயரைப்பற்றி மண்.1 சூக்.61 செய்.15 பார்க்க- பரிதக்ம்யாயாம், பயந்து வட்டமாகக் செல்லுகின்ற காரணத்தால் பரிதக்ம்யா ஸங்கிராமம் அல்லது போராயிற்றென்பர் ஸாயணர். அதனாற் செய்யுளில் சூழ்ந்து செல்லோட்டத்து என்று கூறினர். இவ்விருக்குக்கு மேனாட்டாசிரியர் சரியான பொருள் காணாது இடர்ப்படுவர்.

12. சனங்களே யும்மைக்காண்பான் பிழிசுதைச் சகாயனேடி
மனங்கொளிவ்வேந்தன் வந்தான்; வலம் பெறுமொலியினேய்ந்து
கனந்தரு சோமக்கல்லும் வேதிசார் கொணரப் பெற்ற
தினம் பெறுமகமிச்சிப்போ ரதனை வல்விரைவிற் றேய்த்தார்.

(இ-ள்.) ஜனங்களே! உங்களைக் காணவெண்ணி இந்த இந்திரன் ஸோமம் பிழியும் தோழனாகிய யஜமானனைத்தேடி வந்துள்ளான். சப்தத்தோடு கூடிய ஸோமாபிஷவக்கல் வேதியிற் கொண்டுவரப் பெற்றுள்ளது. அதனை அத்வர்யுக்கள் விரைவாகப் பிரேரேபித்தார்கள்.—(எ-று.)

அக்கல்லைக் கொண்டு ஸோமக்கொடியை நசுக்குகிறார்கள் என்றபடி. சகாயன், தோழன் ஈண்டு யஜமானனைக் குறித்தது

13. யாருனை விரும்பி நின்றாரவர் பினுமுனை விரும்ப;
சாரலா தமைக தீமை மர்த்திய ரமர வன்னார்;
எருடன் வணங்கு மிச்சையியைந்தவர் தம்மைச்சார்க;
சீருடன் வலியியைக்க சேர்ந்த வெஞ்சனங்களுக்கே.

(இ-ள்.) அமரனே! உன்னை விரும்பி நின்ற ஜனங்கள் பின்னும் தீவிரமாக உன்னை விரும்பட்டும். மர்த்தியர்களாகிய

அவர்கள் தீமையடையாது பொருந்துக. யக்ஞ காமிகளாய் உள்ளவர்களை நீ சாருவாயாக. யாங்கள் யாருடைய மத்தியில் ஸ்தோதாக்களாகக் கருதப் படுகிறோமோ அந்த எங்கள் ஜனங்களுக்குப் பலத்தைத் தருவாயாக.

வருக்கம் 31.

## 386 (32) மண்டலம் 5. அநுவாகம் 2. சூக்தம் 17.

12 இருக்குக்கள் கொண்டது.

ரிஷி: ஆத்ரேயன் காது. (Gatu) வடமொழிச்சந்தம்: த்ருஷ்டுப்.

தேவதை: இந்திரன்.

1. உற்சத்தைப் பிளந்து வானினூற்றினைத் திறந்தாய், கட்டினற்பமும் வெளிவராம லடைபட்ட வர்ணவங்கள்
முற்பட வோட்டி வேந்தே மொய்ம்பிற் பர்வதம் பிளந்து
பொற்புறவவிழ்த்தாய் தாரை பொருது தானவனைக்
கொன்றே

(இ-ள்.) இந்திரனே! வான ஊற்றுக் கிணறுகளைப் பிளந்து அங்குள்ள ஊற்றுக்களை யெல்லாம் திறந்தாய். கட்டுப் பட்டு ஓடாமலிருந்த ஜலாசய மேகங்களை ஓடும்படி செய்து, பலத்த பெரிய பர்வதங்களையும் (மேகங்களையு மென்றபடி) உடைத்து, எதிர்த்து நின்ற தானவனை (விருத்திரனை யென்றபடி) கொன்று, மழைத்தாரை வெள்ளம் ஓடும்படி செய்தாய்.— (எ-று.)

உற்சம், ஊற்றுக் கிணறு, இச்செய்யுளிலுள்ள உற்சம் (உத்ஸம்), ஊற்று, அர்ணவம், பர்வதம், தாரை இவை யெல்லாம் மேகத்தையும் மேக நீரையுமே குறித்தன. தானவன், தநு புத்ரன் விருத்திரன் என்பாரேனும் 'உதகஸ்ய தாதாரம் மேகம்' அதாவது நீர் கொடுக்கும் மேகமென ஒரு பொருள் கொண்டு அச்சொல்லையும் கூட மேகத்துக்கே ஏற்றுவோரும் உண்டு. உற்சம், உத்ஸம், மேல்நோக்கிச் செல்வது என்பது நிருக்தப்படி பதப்பொருள். ஊற்றென்னலே தகும். மேல், காநி (Khani) என்ற சொல்லும் ஊற்றென்ற பொருளிலுள்ளதால் இவ்வுற்சத்தைப் பின்வரும் அர்ணவத்தின் வேறுபாடு தோன்ற ஊற்றுக் கிணறென்பர் மேனுட்டாசிரியர்.

2. வச்சிரி, காலந்தன்னின் மடங்கிய வுற்சமோடப்
பொச்சையி னூதையூற்றப் புரிந்தனை, யுக்கிரத்தோய்,
இச்சையிற் படுத்திருந்த வகியையு மிறுத்தாய், வேந்தே,
மெச்சுமுன் வலிமைதன்னை மேலுறத் தாங்கினுயே.

(இ-ள்.) வச்சிராயுதந் தரித்தவனே! வருஷா காலத்திற் றடைபட்டுக் கிடந்த உத்ஸத்தை (ஊற்றுக் கேணியை ஈண்டு மேகத்தை யென்க) ஓடவிட்டாய். பர்வதத்தின் (ஈண்டு மேகத்தின்) மடியை யொழுகவிட்டாய். உக்கிரனே! வேண்டுமென்று (தண்ணீரை யடைத்துக்கொண்டு) படுத்திருந்த விருத்திரனாகிய பாம்பைக் கொன்றாய், இந்திரனே! உனது பலத்தை மகிமை பெறத்தாங்கினாய்.—(எ-று.)

ஈண்டும் உற்சமும் பொச்சையும் மேகத்தையே குறித்தன. ஊதை, ஊ (dh) : என்னும் வடசொல்லின் திரிபு. பால் மடியன்பது பதப்பொருள். மழைத்தாரைவாய் என்றபடி. விருத்திரவதம் செய்தபிறகே இந்திரன் உலகப்பிரஸித்தியடைகிறான் என்பதைத் தெரிவிக்க, மெச்சுமுன் வலிமைதன்னை மேலுறத் தாங்கினாயே, என்று கவி கூறினாரென்பர் ஸாயணர்.

3. மகத்துவ மிருக மன்னுன் படையினைத் தனது வன்மை
திகழ்த்தியே பொடித்தான் வேந்தன்; ஒருவனே செப்ப
ரிகத்தினி லெதிரியுள்ளா ரென்றெணி மதித்தகாலை [வேறு
மிகுத்தவன் றன்னின் மேம்பட்டொருவன் வந்துற்பவித்
தான்.

(இ-ள்.) இந்திரன் மகாவலிமையும் வேகமாகச் செல்லும் மிருகத்தன்மையும் வாய்ந்த அவ்விருத்திரனது ஆயுதத்தை தனது பலமானது எல்லாருக்கும் தெரியும்படி நிச்சேஷமாகப் பொடிசெய்தான். ஒருவனே எனக்கு நிகரான பகைவர்கள் வேறு யாருளர் என்று தனது மனத்துளெண்ணிய அப்பொழுதே அந்த விருத்திர சரீரத்திலிருந்து அவனிலும் பலம்வாய்ந்த மற்றொரு அசுரனாகிய சுஷ்ணன் உற்பவித்தான்.—(எ-று.)

மற்றொரு அசுரன் சுஷ்ணன் என்பதற்கு ஸாயணர்தம் உரையில் ஒரு மேற்கோள் கூறுவர். அடுத்த செய்யுளில் சுஷ்ணன் பெயரே வந்துள்ளது காண்க.

4. அவனையு மிவற்றனத்திற் களிக்கின்ற மேகக்காவற்
றவவலியோங்கினோனைத் தமத்தினிற் செல்லுவோனை
யிவவு.று முகிலை வாட்டும் வச்சிரி குலிசமேந்திக்
குவியுறு தானவன் சீற்றத்துச் சுட்டுணனைக்கொன்றான்.

(இ-ள்.) உலகத்திலுள்ள இப்பிராணிகளுக்கு உபயோகப் படுகின்ற அன்னத்தைத் தானே யுண்டுகளிக்கின்றவனும், மேகத்தை (மழையை விடாதபடி) காப்பாற்றிவைப்பவனும், வலியோங்கி மிகவும் வளர்ந்துள்ளவனும் இருட்டிற் செல்லுபவனுமாகிய அவனையும் கூட (அகியையும் கூட என்றபடி) மழை வர்ஷிக்கும் மேகங்களை யடிப்பவனுகிய வச்சிரி (இந்திரன்) தனது வச்சிராயுதத்தால் (கொன்றது மன்றி) அந்தத் தானவனுகிய விருத்திரனது கோபத்துதித்த சுஷ்ணன் என்னும் அசுரனையும் கொன்முன்.—(எ-று.)

5. சாவிலே னென்ன நின்றவவனுக்கு மருமத்துற்ற
தாவிலா வறிவிற் காணத்தயக்கினை, நற்பலத்தோய்,
ஓவிலாமதத்துச் சோம முண்டு போர்க் குவந்தெழுந்த
ஈவனை யிருட்டுமிக்க குழியினி னிமைத்தபோதே.

(இ-ள்.) நல்லவலிமை வாய்ந்தவனே! குறைவிலாச் சந்தோஷத்தைத் தரும் ஸோமத்துளிகளைக் குடித்துப் போருக்கு விரும்பி வந்த இந்த விருத்திரனை இருட்டுமலிந்த குழியினிற் றள்ளினபோது சாகமாட்டோ மென்றெண்ணி யிருந்த அவ் விருத்திரனது மர்ம ஸ்தானத்தில் (சாவோமென்ற) அறிவுண்டாகும்படி செய்தனை.—(எ-று.)

இச்செய்யுள் ஸாயணருரை மேனுட்டாசிரியருரை இரண்டையும் தழுவியாத்தது.

6. அவனை, யந்தரத்தி லின்பமளிக்கு நீர்க்கட்படுத்துத்
துவள்பவன் றன்னைச், சோதியற்ற பேரிருளி லோங்கு
மவனை, யிந்திரன், தழிந்த சோவத்தின் மதர்த்தகாளை,
புவன வுச்சியின் மேற் சம்பமோச்சியே பொடித்துக்
கொன்முன்.

(இ-ள்.) அந்தரிட்சத்தில் இன்பத்தைத் தரும் தண்ணீருக்குட் படுத்துப் புரளுபவனும் சூரிய வெளிச்சமே யற்ற பெரிய இருட் பிரதேசத்தில் வளர்ந்தோங்குபவனுமான அவ் விருத்திரனை, ஸோமம் பிழிந்து தரக் குடித்த மதத்தோடு கூடிய (இச்சைகளையளிக்கும்) விருஷபமாகிய இந்திரன் உன்னதப் பிரதேசத்தில் (தனது வச்சிராயுதத்தை) எறிந்து கொன்முன்.—(எ-று.)

சம்பம் பொருனோக்கிச் சேர்ந்தது. அவனை என இரண்டு தரம் வந்தது அடி நிறைக்க வென்பார் ஸாயணர்.

வருக்கம் 32.

# வேத ப்ரவசன மந்திரம்.

27, முத்து முதலி வீதி, ராயப்பேட்டை,

சென்னை.

---

வேதங்களைத் தமிழில் வெளியிடும் நிலயம் இது.

அடியிற் கண்ட நூல்களும் இங்கு விலைக்குக் கிடைக்கும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கிருஷ்ண ராஜ தந்திரம் | ... | 0 | 8 | 0 |
| 2. | சங்கற்ப வெறுமை | ... | 0 | 6 | 0 |
| 3. | உபதேசபஞ்சரத்நம் | ... | 0 | 2 | 0 |
| 4. | The Ever Showing Phenomenon in Man | ... | 1 | 0 | 0 |

5. ரிக்வேதப் பழைய மாத ஸஞ்சிகைகள் மாதிரிக் காப்பியாக நான்கு அணா ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு அனுப்பப்படும்.

பதில் விரும்புவோர் ரிப்ளை கார்டாவது பதிலுக்கு ஸ்டாம்பு ஒட்டிய கவராவது அனுப்பவும்.

வேண்டுவோர்

காரியதரிசி.

வேதப்ரவசன மந்திரம்,

27, முத்து முதலி வீதி, ராயப்பேட்டை,

சென்னை. என்றெழுதவும்.